பதழ்

1.1.1979



# தமிழரசு

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு 1979

விலை 50 காசு



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.



# நலமான குழந்தையே நாட்டின் சொத்து

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழியிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

மகன்தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

—திருவள்ளுவர்



தமிழரசு

மலர் : 9 இதழ் : 13

1-1-1979

# ஆக்கப் பணிபுரிய அரியதொரு வாய்ப்பு

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

## செல்வி பி.டி. சரசுவதி அவர்களின் வேண்டுகோள்



குழந்தைகள் நலமும் குடும்ப நலமும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. நிரந்தர மான அடிப்படையில் குழந்தைகளுக்கு நன்மை தரத்தக்க நல்ல பல வசதிகளை, குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திட மேற்கொள்ளும் ஆக்க பூர்வமான பணிகளுக்கு, இந்த சர்வதேச குழந்தை ஆண்டு அரியதொரு வாய்ப்பாக அமைய வேண்டும் என்பதே என் விருப்பம்.

குழந்தைகள் பசிக்கு உணவளித்து. நோயுற்று இருந்தால் மருந்து கொடுத்து, மன வளர்ச்சி குன்றியிருந்தால் செம்மைப்படுத்தி, அளாதையாகவோ ஆதரவின்றியோ இருந்தால், பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியது மிகமிக அவசியம்.

மெத்தனமான போக்கை மாற்றி, குழந் தைகள் தங்கள் திறமையை சமுதாயப் பணிக்கு முழுமையுடன் அர்ப்பணிக்கும் உணர்வோடு வளர்க்கப்படவேண்டும்.

தமிழ்நாட்டீள் மொத்த ஜனத்தொகையில் 38 சதவிகிதக்குழந்தைகளுக்கு-ஏறக்குறைய ஒன்றரைக் கோடி, தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து மேலும் அவ் வசதிகளைச் செவ்வனே அதிகரிக்க வழி தேட இந்த ஆண்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் இரண்டரை வயது முதல் அய்ந்து வயதுக்கு உள்ளான குழந்தைகளின் பாலர் பள்ளிகள் 4,500 உள்ளன. சமூகநலத்துறை, சமூக நல வாரியம் மூலமாக சுமார் அய்யாயிரம் குழந்தைகள் தனியார் நிறுவனங்களின் வாயிலாக மானியம் பெற்றுப் பராமரிக்கப்பெறுகிறார்கள். இன்னும் அய்ந்து ஆண்டுகளில் மேலும் ஒன்பதாயிரம் பாலர் பள்ளிகள் அமைக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கின்றது.

குழந்தைகள் நலனுக்காக ஒரு நிதி ஏற் படுத்தி, அந் நிதியின் மூலம், ஆதரவற்ற குழந்தை களைப் பாதுகாக்க இல்லங்களும், உடல் ஊன முற்ற குழந்தைகளுக்குச் செயற்கை ஊன்று கோல்களும், காது கேளாத குழந்தைகளுக்குக் கருவி வழங்கவும், பள்ளி செல்லும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்கவும், முதல் வகுப்பி லிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கும் உடல் ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்கவும் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிலே தமிழ்நாடு குழந்தைகள் நல வாரியத் தின் தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

மக்கள் கவனத்தின் மையத்தில் குழந்தை களின் நல்வாழ்க்கையின் முக்கியத்தை நிலை நிறுத்தும் இப்பணிகளை மனத்தில் தேக்கி, வெறும் பேச்சோடு மட்டும் இல்லாமல் நடை முறையில் செயலோடு சிறப்புற இப்பணிகள் தொடர வேண்டும் என்று வலியுறுத்தி வாழ்த்து கிறேன்.

# அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் நோக்கம்



அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் முக்கியமான இலட்சியங்கள் வருமாறு:

* குழந்தைகளின் நல்வாழ்வைப் பேணிப் பாதுகாத்திடுவதற்கான, தத்தமது திட்டங்களை மறு பரிசீலனை செய்யுமாறு, எல்லா நாடுகளையுமே ஊக்குவிப்பது ; ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலைகள், தேவைகளின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப, தேசிய மற்றும் உள்ளூர் செயல் திட்டங்களுக்கான ஆதரவைத் திரட்டுவது ;

* பொது மக்களிடையேயும், கொள்கை வகுப்போர் இடையேயும், குழந்தைகளின் சிறப்புத் தேவைகளின் உணர்வை, உயர்த்திக் காட்டுவது ;

* ஒரு தரப்பில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கும் மறு தரப்பில், பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கான திட்டங்களுக்கும் இடையே நிலவும் முக்கியமான இணைப்பின் அங்கீகாரத்தை அதிகரிப்பது ;

* தேசிய மட்டத்தில், குறுகிய காலத்துக்கும் நீண்ட காலத்துக்கும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கவல்ல காரியங்கள் செய்வதற்காக, எட்டக்கூடிய இலட்சியங்களுடன் கொண்ட, குறிப்பிட்ட-நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை ஊக்குவிப்பது ;



* குழந்தைகளின் உடல் நல ஆரோக்கியத்துடன் கூடவே, அவர்களின் அறிவு வளர்ச்சியையும், உள்ளத்து வளர்ச்சியையும் வலியுறுத்துவதற்கான ஓர் ஊக்குவிப்பாக இந்த ஆண்டு இயங்க வேண்டும்.

* குறிப்பாக பிரதிகூலமான விதத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். உதாரணமாக, இவ்விதம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் பிரிவுகளில் சமத்துவமற்ற, பாரபட்சமான விதத்தில் நடத்தப்படும் இளம் பெண்கள்; சேரிக் குழந்தைகள், குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்களின் குழந்தைகள், தவறாகப் பயன்படுத்தப்பட்ட குழந்தைகள்; அனாதைக் குழந்தைகள், அதிகக் குழந்தைகள், திருமணமாகாத தாய்களுக்குப் பிறந்த குழந்தைகள்; ஏழைக் கிராமப் பகுதிகளில் வாழும் குழந்தைகள், போதை மருந்துகள்—குற்றங்களுக்கு இலக்காகிவிட்ட குழந்தைகள்; ஊட்டக் குறைவினால் அல்லல்படும் மற்றும் விரிவான பல பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள் ஆகியன இடம் பெறுகின்றன.

1979ஆம் ஆண்டு, குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தின், இருபதாம் ஆண்டு நிறைவாகும். எனவே, ஒவ்வொரு நாடும் இந்த உரிமைகளை அமலாக்குவதற்கான தனது முயற்சிகளை அதிகரித்துக் கொள்வதற்குள்ள ஒரு வாய்ப்பாக, இந்தக் குழந்தை ஆண்டைப் பயன்படுத்த வேண்டும்.

தேசிய மற்றும் உள்ளூர் செயல் நடவடிக்கைத் திட்டங்கள், இந்த ஆண்டின் மைய அம்சமாக விளங்குகின்றன. அதே சமயம், குழந்தைகளின் தேவைகள் பற்றிய

புதிய ஆராய்ச்சியையும் 'குழந்தை ஆண்டு' ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் குழந்தை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சித் தகவல்களை, விரிவாகத் திரட்டிப் பரப்பிடவும் முயல வேண்டும்.

குழந்தைகளின் சார்பில், நெடுங்காலத் துக்குப் பயனளிக்கவல்ல, நீடித்த தேசிய நட வடிக்கைகளைத் தோற்றுவிப்பதே, இந்தக் குழந்தை ஆண்டின் முக்கியமான அம்சமாத லால் குறுகிய ஆயத்தக் காலம், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகவே, ஒவ்வொரு நாடும், சாத்தியமான விரைவில், இந்தக் குழந்தை ஆண்டுக்கென, விரிவான பிரதிநிதித்துவம் கொண்ட தேசியக் கமிஷன் ஒன்றை அமைத்து, இதில் தேசிய நிறுவனங் கள், சமுதாயக் குழுக்கள், தனி நபர்கள் — ஆகியோர் முனைப்புடன் பங்கு பெறுதலை ஊக்குவிக்கச் செய்வது, மிகவும் விரும்பத் தக்கதாகும். 1979ல் துவங்கும், தேசிய மட்டத்திலான செயல் திட்டங்களுக்கான ஆயத்தப் பணியில் இதில் பங்கு பெறும் நாடு கள் 1977லும் 1978லும் சிறப்பான தலைப்புக் கள் பற்றிய செயல் குழுக்களையோ கருத் தரங்குகளையோ ஏற்பாடு செய்ய விருப்பம் கொள்ளலாம்.

சமீபத்திய 'ஆண்டுகளை'ப் போல அல் லாமல், 'குழந்தைகள் ஆண்டு' ' மாபெரும் உலக மகாநாடு'' ஒன்றில் கவனம் செலுத் தாது. இத்தகைய மகாநாடு ஒன்றுக்குத் தேவைப்படும் அவகாசம், சக்தி மற்றும் செல வுகள் ஒவ்வொரு நாட்டிலும், குழந்தை களுக்கு நன்மை தரவல்ல, தேசிய செயல் திட்டங்களுக்கு ஆயத்தம் செய்து, நிறைவேற் றிடும் முயற்சியில் பயன்படுத்தப்படும்.

**அனைத்து நாட்டுக் குழந்தை ஆண்டின் இலட்சியங்கள் :**

நிரந்தரமான ஓர் அடிப்படையில், குழந்தைகளுக்கு நன்மை தரவல்ல வசதிகளின் நிலையை, குறிப்பிடத்தக்க விகிதத்தில் அதி கரிக்கும் முயற்சியை ஊக்குவிப்பதே. இந்த ஆண்டின் முக்கியமான இலட்சியமாகும் — அறுதியில் இந்த இலட்சியத்துக்கான நிதி வசதியை அதிகரிப்பதையே இது குறிப்பிடு கிறது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள, கல்வி மற்றும் தகவல் துறை நடவடிக்கைகள், பொது மக்களின் கருத்தை உருவாக்கி, குழந்தை களின் திட்டங்களுக்கான ஒதுக்கப்பட்டுள்ள நிதிவசதியை, வலுவில் முன் வந்து அதிகரிப்ப தற்கான அரசு நடவடிக்கையை ஊக்குவித் திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான இந்தத் திட்டங்கள் அந்த நாட்டின் உள்நாட்டுத் திட்டங்களுக் காகவோ, வேறு நாடுகளின் உதவிக்காகவோ இரண்டு காரியங்களுக்காகவும் இருக்கலாம். வளரும் நாடுகளில், குழந்தைகளுக்கான வசதி களில் தேசிய ஆதரவையும், சர்வதேச ஆதர வையும் அதிகரிக்கும் முயற்சி முக்கியமாக வலி யுறுத்தப்பட வேண்டும். உலகில் எல்லா இடங்களிலும் காணப்படும் குழந்தை நல நோக்குடைய திட்டங்கள் சம்பந்தமாய், அரசுகளும் பொது மக்களும் நிதி ஆதரவு தருவதையும், தாமாகவே வலுவில் முன்வந்து, இந்தத் திட்டங்களில் பங்கு பெறுவதையும் ஊக்குவிப்பது வாயிலாக, இது செய்யப்பட லாம்.

தொழில் வளமிக்க நாடுகளில், திரட்டப் படும் நிதிகளிலும், செய்யப்படும் முயற்சிகளி


ரெ. எஸ். 1452,

# சங்ககிரி கூட்டுறவு அர்பன் பாங்க் லிட்.,

**சங்ககிரி : : சேலம் Dt.**

பாதுகாப்பு பெட்டக வசதியுடன் கூடியது

வெளிநாடு சென்று தனது பயனுள்ள சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர் களுக்கு இவ்வங்கியின் சார்பில் இதயங்கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

வி. பி. அஹமத்ஜான், உப தலைவர்.

பி. பழனிச்சாமி கவுண்டர், தலைவர்

K. சின்னண்ணன், செயலாளர்

எஸ். என். இராமகிருஷ்ணன் பொக்கிஷதார்

நிர்வாக இயக்குனர்கள்

திரு கே. கே. கந்தசாமி,
திரு ஜெ. ஜெகந்நாதன்,
திரு எஸ். பி. செங்கோடன்.
திரு எஸ். பி. வாசுதேவன்,
திரு கே. ஏ. தேவராஜன்,

ANNA PUB. 3011/9/78

லும் ஒரு பகுதி, தம் நாட்டுக் குழந்தைகளின் சிறப்புத் தேவைகளைச் சமாளிக்கும் காரியத்துக்கென ஒதுக்கப்பட வேண்டும். இத்துடன், இத்தகைய நிதிகளிலிருந்து கணிசமான பகுதி, வளரும் நாடுகளிலுள்ள, குறிப்பாக வளர்ச்சியே காணாத நாடுகளிலுள்ள, குழந்தைகளுக்கு நன்மை பயப்பதான திட்டங்களுக்கென ஒதுக்கி வைக்கப்படலாம். இந்த நிதியுதவி, எந்த நாடுகள், தங்களின் பொதுவான தேசிய வளர்ச்சித் திட்டத்துக்குள்ளாகவே, இத்தகைய பணி முயற்சிகளை ஒருங்கிணைந்து வசதிகளை விஸ்தரிப்பதற்கு தங்கள் நிதி ஒதுக்கீட்டை கணிசமாக அதிகரிப்பது என்று முடிவு செய்கின்றனவோ, அவைகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

உரிய அய். நா. ஏஜென்சிகள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் வாயிலாகவோ அரசுக்கு-அரசு என்ற அடிப்படையிலோ, இந்த உதவி அனுப்பி வைக்கப்படலாம்.

வளரும் நாடுகளுக்கும், தொழில் வளமிக்க நாடுகளுக்குமான, இந்தக் 'குழந்தை ஆண்டின்' பொதுவான கருத்துக்கள் இப்பொழுதுதான் உருவெடுக்கத் துவங்குகின்றன.

கட்டுப்பாடு, அடிப்படைக் கல்வி, மகளிர்க்கான சகாயப் பணித் திட்டங்கள்—ஆகிய துறைகளில், எளிய அடிப்படை வசதிகளை வழங்கிட, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படலாம்.

அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, அதை விஸ்தரிப்பதற்கு, துவக்கத்தில் வெளிநாட்டு நிதியுதவி இருந்தே தீரவேண்டும்; என்றாலும் கூட, மதிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள் நியாயமானவைதான். 'குழந்தை ஆண்டை' ஒட்டித் திரட்டப்படும் நிதியில் ஒரு பகுதி, இந்த அடிப்படை அணுகுமுறை நடவடிக்கையை, செயல்படுத்தும் முயற்சிக்கெனப் பயன்படுத்தலாம்.

இத்தகைய வசதிகளைப்பராமரிப்பதற்கு திரும்பத்திரும்ப ஏற்படும் செலவுகள் போதுமான அளவுக்கு குறைவாகவே இருத்தல் வேண்டும். அப்போதுதான், அரசுகளும் சமூக அமைப்புக்களும் நியாயமான ஒரு கால வரம்பிற்குள் தங்கள் சொந்த நிதி வசதிகளிலிருந்து, அவற்றை நீடித்துப் பராமரிக்க இயலும்.

குழந்தைகளின் தேவைகளைப் பற்றிப் பொது மக்களும், அரசுகளும் கொண்டுள்ள,

## சின்னங்களுக்கு விளக்கம்

மேல்நோக்கிய குழந்தை ஒன்றின் உருவமும், காக்கும் கரங்களினால் அக்குழந்தையை அரவணைத்திடும் முதியவர் ஒருவரின் உருவமும், அய். நா. அனைத்து நாட்டுக் குழந்தை ஆண்டின் சின்னத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே நிலவும் உறவு முறைகளை இச்சின்னம் எடுத்துரைக்கிறது.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையொட்டி இந்தியாவில் சித்திரிக்கப்பட்டுள்ள சின்னத்தில் ஒரு சிறுவனும் சிறுமியும் இடம் பெற்றிருக்கின்றனர். எழுது பலகையின் உருவமும் சூரியனின் வடிவமும் இடம் பெற்றுள்ளன. சூரியன், உடல் நலத்தையும் வலுவையும் எடுத்துச் சொல்கிறது; எழுதுபலகை, வருங்காலக் குழந்தைகளின் கல்வி அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

ஆனால் இந்தக் 'குழந்தை ஆண்டை' அறிவிப்பதற்கான தீர்மானம், குறிப்பிட்ட ஒரு கருத்தை ஏற்கெனவே சுட்டிக் காட்டுகிறது. ''அடிப்படை வசதிகளே''—அந்தக் கருத்தாகும். சுகாதாரம், சத்துணவு, கல்வி ஆகிய துறைகளில் அத்தியாவசியப் பணிகளில் ஒரு குறைந்த பட்ச அளவைக் கூட எட்ட முடியாத நிலையில் வளரும் நாடுகளில் உள்ள சுமார் 35 கோடிக் குழந்தைகள் இருந்து வருகின்றன என்ற உண்மையிலிருந்து தான், 'அனைத்து நாட்டுக் குழந்தை ஆண்டின்' நோக்கம் வெளிப்படுகிறது.

வறுமையினால் உழலும் இக் குழந்தைகளுக்கு இந்த அடிப்படை வசதிகள் கிடைக்கச் செய்ய, விரைவான, நடைமுறை சாத்தியமான, சிக்கனமான வழிகள் இருக்கின்றன. முறையான அரசு வசதிகள் பெறாமலேயே இன்னமும் இருந்து வரும், வளரும் உலகத்தைச் சேர்ந்த ஏராளமான பகுதிகளை, அவற்றின் மிகக் கடுமையான தேவைகளைக் கண்டறியும் பொருட்டு, உள்ளூர் சமூக அமைப்புக்கள் எட்டிடலாம். இந்தச் சமூக அமைப்புக்களிலிருந்து, கிராம நிலையிலான ஊழியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு உணவு—சத்துணவு, சுத்தமான தண்ணீர், சுகாதார நடவடிக்கைகள், பொறுப்பு வாய்ந்த குடும்பக்

மிகத் தீவிரமான உணர்வும், கருத்தும், மனித குலத்தின் எதிர்காலச் செல்வங்களான தனது குழந்தைகளுக்கு, நிரந்தரமான தன்மை தர வல்ல, ஆக்கபூர்வமான காரியங்களுக்கு வழி வகுத்திட முடியும் என்பதை எடுத்துக்காட்ட இந்த 'குழந்தை ஆண்டு' அரியதொரு வாய்ப்பை அளித்திடுகிறது. குழந்தையின் வருங்காலத்தைக்காட்டிலும் உறுதியான மிகப் பெரிதான கடமைப் பொறுப்பு, இன்றைய முதியோர்களுக்கு இருக்க முடியாது. இந்தக் 'குழந்தை ஆண்டின்' மாபெரும் நம்பிக்கை நிறைந்த திறனாற்றல்களுக்கு அரசுகள் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின், அசைக்க முடியாத ஆதரவு தேவைப்படுகிறது; அந்த ஆதரவுக்கு அவை தகுதியுள்ளவை; அந்த ஆதரவைத்தான் அவை நம்பியிருக்கின்றன.

குழந்தைகளின் நலன்களைப் பற்றிய நிரந்தரமான உயர் நிலையிலான கவனமும் கவலையும், 'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின்' பெரியதொரு பரம்பரைச் சொத்தாக இருக்கலாம்; இருக்கவும் வேண்டும்.

*('யூனிசெஃப்' நிறுவனத்தின் 'குழந்தைகள் ஆண்டு' என்ற வெளியீட்டிலிருந்து)*

# படமும் செய்தியும்



1978-83 ஆண்டுக்குரிய 6 வது ஐந்தாண்டுத் திட்ட நகலை தமிழ்நாடு திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் 16-12-78-ல் வழங்கினார்.

அண்மையில் தமிழகத்துக்கு வருகை புரிந்த சிங்கப்பூர் பிரதமர் லிக்யுவான்-யூ தமது குடும்பத்தினருடன் மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் பார்வையிட்டார்.



காவல் துறையினருக்கு வீர விருதுகள் வழங்கும் விழாவில் [16-12-78] மேதகு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விருது வழங்கினார்.





தமிழகத்துக்கு வருகை புரிந்த மத்திய அரசின் வெள்ள நிவாரணக் குழுத் தலைவர் திரு ஜெய் சுக்லால் ஹாத்தியுடன் மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 16-12-78-ல் கலந்துரையாடினார்.



சென்னை நகரின் புதிய ஷெரீப் திரு. ஏ. பி. அனந்த கிருஷ்ணன் [20-12-78ல்] பதவி ஏற்றார்.

சென்னை விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் லண்டன் விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கம், சென்னைச் சங்கத்துக்கு வேன் ஒன்றினை வழங்கியது. (15-12-1978)



# சைனிக் பள்ளி, அமராவதிநகர்,

## கோவை மாவட்டம்.

## 6 வது வகுப்புக்கு மட்டும் 1979-ஆம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு

மேற்கண்ட தேர்வு 1979 பிப்ரவரி மாதம் 24, 25 தேதிகளில் நடைபெறும். (விடைகளைத் தமிழ், ஆங்கிலம், இந்தி, மற்றும் இந்தியப் பிரதேச மொழிகளில் எழுதலாம்). இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப் பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு, தேர்வு போர்டு முன் ஆஜராக வேண்டும். பள்ளியில் இருக்கும் காலி இடங்களின் அளவுக்கேற்றவாறு தேவையான சிறுவர்கள் மட்டும்தான் இத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். வெற்றி பெற்ற சிறுவர்கள் அவர்களது உயர்ந்த மதிப்பெண் வரிசையில் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 15 சதவிகிதமும், பழங்குடி வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 7.5 சதவிகிதமும் இடங்கள் ஒதுக்கப்படும். அவர்களது தேர்ச்சிக்கான மதிப்பெண்களும் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன.

**வயது :**

1967 ஜூலை 2 மற்றும் 1969 ஜூலை 1ஆம் தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உள்பட).

**தமிழ்நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள் :**

சென்னை, கடலூர் (புதுநகர்), தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, அமராவதிநகர், மதுரை, திருநெல்வேலி, வேலூர் (வ.ஆ. மாவட்டம்), சேலம்.

**பள்ளிப் பாடத் திட்டம் :**

திறமையான கல்வி, உணவு வசதி, மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற் பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாது காப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும் மத்திய செகண்டரி கல்வி போர்டாரால் 10 ப்ளஸ் 2 பாடத் திட்டத்தின்படி நடத்தப்படும் அகில இந்திய செகண்டரி தேர்வுகளுக்கும் சிறுவர்கள் தயார் செய்யப்படுவார்கள், போதனா மொழி ஆங்கிலம். உயர்கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியை கட்டாய பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பள்ளிக் கட்டணம் :**

ஆண்டுக்கு ரூ. 3,500 (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உள்பட). உடை வகைகள் கட்டணம் (Outfit Charges) ரூ. 500 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 250 பின்வரும் ஆண்டுகளிலும், செலுத்த வேண்டும். காப்புத் தொகை ரூ. 150 (இது பள்ளியை விட்டுச் செல்லும்போது திருப்பித் தரப்படும்), கைச் செலவுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 செலுத்த வேண்டும்.

**தகுதி மற்றும் வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகைத் திட்டங்கள் :**

தமிழ்நாடு—தமிழ்நாட்டில் நிலைத்து வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கும் மற்றும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளும் வருடத்தின் ஜனவரி 1ஆம் தேதியன்று குறைந்தபட்சம் மூன்று வருடங் களுக்குத் தமிழ்நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச்சம்பளம் கிடைக்கும்.

கூட்டாக பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 500, ரூ. 600, ரூ. 800, ரூ. 1,000 வரையில் இருக்குமானால் அப்பொழுது அளிக்கப்படக் கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்பு முறையே, ரூ. 3,000, ரூ. 2,250, ரூ. 1,500, ரூ. 750.

பாதுகாப்பு அமைச்சகம் — பணிபுரிந்து வரும் முன்னாள் J.C.O.க்கள், Other Ranks மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை, விமானப் படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்ப ளங்கள் கிடைக்கும்.

மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகள் — மத்திய அரசு நேரடி ஆட்சிகள் உள்ள பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

**விண்ணப்பம் மற்றும் தகவல் தொகுப்பு :**

விண்ணப்பப் படிவம், பள்ளி தகவல் தொகுப்பு, மாதிரி வினாத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 50 பைசா தபால் தலை ஒட்டிய 25 செ.மீ. X 20 செ.மீ. அளவுள்ள சுய விலாசமிட்ட உறையுடன் ''முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதிநகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு) அவர்கள் பெயருக்கு ரூ. 3க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 2.50க்குத் தபால் தலை ஒட்டிய சுயவிலாசம் இட்ட உறை அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்கள் பள்ளி முதல்வருக்கு வந்து சேர இறுதி நாள் 31—1—1979.

**—முதல்வர்.**

DIPR 564/52



# "குறுகுறுத்த விழியிரண்டும்"



டாக்டர் ராஜம்மாள் பா. தேவதாஸ்

குழந்தைகளின் உலகமே தனியானது; இனிமையானது, இதமானது; அன்பானது: லலிதமானது. நம்முடைய அன்றாட அலுவல்களின் நெருக்கத்தினால் பாதிக்கப்பட்டு வீட்டையடைந்ததும், நம் குழந்தைகளின் முகங்களையும், அம்முகங்களில் தவழும் உற்சாகத்தையும் காணும்போது நம் மனப்பாரம் குறைந்து, மனம் இலேசாகிறது.

**குழந்தைகளும் பெற்றோர்களும் :**

குழந்தைகளிடம் பெற்றோர்களுடைய தொடர்பு என்பது ஒரு கலையாகும். ஆனால், பல்லாயிரக்கணக்கான பெற்றோர்கள் 'நானும் குழந்தையை வளர்க்கிறேன்', என்று எந்தவித நோக்கமுமில்லாமல் வளர்த்து விடுகின்றனர். குழந்தைகளின் மன இயல்புகளை அறிந்து, அவர்களது விருப்புக்களையும், வெறுப்புக்களையும் தெரிந்து, அவற்றுக்கிசைந்தாற்போல் குழந்தைகளிடம் தொடர்பு கொள்வது என்பது தனியானது.

**விளையாட்டு மோகம் :**

இரண்டு மூன்று வயதானதும் குழந்தையின் உள்ளம் புதுப்புது செயல்களில் ஈடுபட ஆரம்பிக்கிறது. அவன் உள்ளம் மிகவும் கற்பனை வாய்ந்தது. அவன் தனித்து விளையாடவே விரும்புவான்; சில சமயங்களில் அவன் வயதொத்த குழந்தைகளுடன் விளையாட விரும்புவான். தானாகவே விளையாடுவதற்குப் பல பொருள்களை நாடுகிறான்; சிரிப்பான், மகிழ்வான். இப்பருவத்தில் அவனுடைய உள்ளம் ஒரே பொருளிலேயே தன் கவனத்தைச் செலுத்தாது. புதுப் பொருள் ஒன்றைக் கண்டதும் பழைய பொருளை அப்படியே விட்டுவிட்டு அப்புதிய பொருளுக்கு அவன் உள்ளம் தாவும். அச்சமயங்களில் அவன் விளையாடுவதற்காகப் பல விளையாட்டுப் பொருள்களைப் பெற்றோர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவனுள் சந்தோஷத்தையும் சிரிப்பையும் வரவழைக்கும் வகையில்-குறைந்த விலையில் விளையாட்டுச் சாமான்களை வாங்க வேண்டும். சிறுசிறு மரத்துண்டுகள், பொம்மைகள், பந்துகள் வர்ணங்கள், விளையாட்டு ரயில், சப்தங்களை எழுப்பும் விளையாட்டுப் பொருள்கள், சிறுசிறு உடைகள், சிறு தட்டுகள் ஆகியவற்றை அவனுடைய குழந்தை உள்ளம் விரும்பும். 'ஏன்'? 'எவ்வாறு'?

மூன்று, நான்கு வயதானதும் குழந்தையின் உள்ளம் ஆகாயம், நட்சத்திரங்கள், நிலா, ரயில் பாதை, நாய், பூனை இவற்றைப் பற்றியெல்லாம் நினைக்கும்; அவற்றை அடிக்கடி பார்க்க வேண்டும் என ஆவல் கொள்ளும் தர்க்கக் குணமுள்ள, விவேகம் வாய்ந்த, ஆய்ந்தறியும் தன்மை கொண்ட குழந்தைகளுக்கு எந்தவொரு விஷயத்தையுமே, 'ஏன்?' 'எவ்வாறு?' போன்ற கேள்விகள் பின்னணியில் இருக்குமாறு ஆராயவே தோன்றும். நிலா, நட்சத்திரங்கள் போன்ற பலவற்றைப் பார்க்கும் குழந்தையின் உள்ளத்தில், 'வானம்' ஏன் நீலமாக இருக்கிறது?', 'ரயில் மண் பாதையில் செல்லாமல் தண்டவாளங்களின் மேல் செல்வது ஏன்'? 'மரங்கள் ஏன் இலைகளைக் கொண்டுள்ளன? நட்சத்திரங்கள் மின்னுவதெவ்வாறு?' 'குழந்தைகள் எங்கிருந்து வருகின்றன?' 'தாத்தா எங்கே போய் விட்டார்?' (அவர் இறந்துவிடும் பொழுது) போன்ற எண்ணிலடங்காக் கேள்விகள் மலரவே செய்யும்.

அவனுடைய உள்ளத்தில் புதிதாக 'ஏன்?' என்ற கேள்வி முகிழ்க்கும். சில சமயங்களில் அவனுடைய கேள்விகள் சிரிப்பை வரவழைக்கும்; சில சமயங்களில் எரிச்சலை ஏற்படுத்தும்; ஒரே கேள்வியையே தகுந்த பதிலளித்தும் திரும்பத் திரும்பக் கேட்பான்; ஆனால், பெற்றோர்கள் எரிச்சல் கொள்வதற்குப் பதிலாக அவன் வயதில் இப்படிக் கேள்வி கேட்கும் மனப்பக்குவம் அமைந்துள்ளதே என்பதற்காகப் பெருமைப்பட வேண்டும். பதில்கள் நீண்டதாக இருக்காமல் அவனுடைய மனத்தில் பதியும் அளவுக்குச் சுருக்கமாக இருக்க வேண்டும். அவனுடைய கேள்விக்குப் பதில் கூறாமல் அசட்டை செய்திடில் குழந்தையின் அறிவு விருத்தியடைவதற்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கத் தவற விடுதல் என்பதே அர்த்தமாகும்.

**பெற்றோருடைய (செயல்களின்) அச்சாக...**

தன்னுடைய செயல்களினால் குழந்தை பெற்றோரை மகிழ்விக்க எண்ணும். பொதுவாக, பெற்றோருடைய செயல்களே அவனுடைய செயல்களுக்கு அடித்தளமாக அமைந்து விடுகிறது. அவன் தந்தையைப் போலவே செயல்களில் ஈடுபடுவான். (பெண் குழந்தையாய் இருப்பின் அம்மாவின் 'இமேஜ்' அவளுள் படிந்திருக்கும்).

ஆகையால் நல்லவிதமாக நடந்து கொள்வது எப்படி என்பதை அவனிடம் அறிவுறுத்த வேண்டும். அறிவுறுத்துவதைவிட, பெற்றோர்கள் நன்முறையில் நடந்து கொள்வதே முக்கியம். பெற்றோர்களுக்குத் தெரியாமல் அவனுடைய கண்கள் அவர்களைக் கண்காணிக்கவே செய்யும். அவர்கள் செயல்களைக் கூர்ந்து நோக்குவான். அப்பா 'டை' கட்டியிருக்கிறாரே, எனக்கும் வேணும்! 'அப்பா புக் படிக்கிறாரே. நானும் படிப்பேன்!' 'அப்பா ஆபீசுக்குப் போறாரே, நானும் போவேன்!' 'அப்பா 'குட்மார்னிங்' சொல்றாரே, நானும் சொல்லுவேன்!'—இந்த அன்பான, இதமான வாக்கியங்களைக் கேட்பதற்கு எவ்வளவு சுகமாக இருக்கின்றது!

''அப்பா மட்டும் 'சிகரெட்' குடிக்கலாம் நான் குடிக்கப்படாதாம்! பெரிய மனுஷி...சொல்ல வந்துட்டா'

சே...எவ்வளவு அருவருப்பாயிருக்கிறது. முகத்தைச் சுழித்துக் கொள்ளலாம் போலத் தோணறது!

இப்படிக் குழந்தையின் இரண்டு வித மனநிலைகளுக்குக் காரணம

யாராக இருக்க முடியும்? பெற்றோர்தான்!

அவர்கள் கற்றுக் கொடுக்கும் நல்ல பழக்கங்கள்தான் அவனுடைய எதிர்கால வாழ்வைச் செம்மைப்படுத்த உதவும், வெளியுலகு பெரும்பாலும் ஒருவனை மட்டந்தட்டவே-தீய பழக்கங்களை ஏற்படுத்தவே செய்யும். வீட்டிலும் நல்ல பழக்கங்களை அவனிடம் ஏற்படுத்தவில்லையெனில் அப்புறம் அவனுடைய எதிர்கால வாழ்வு எப்படிப் பிரகாசமாக அமையும்?

**'ஆ! டாக்டரா'**

இருட்டு, மிருகங்கள், மருத்துவ நிலையம் போன்றவை அவனுள் பயத்தை விளைவிக்கும். மனம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கும். அச்சமயங்களில் அவனது பயத்தைப் பற்றி 'கேலி' செய்யக்கூடாது. அப்பயத்தைப் போக்கும் காரியங்களில் ஈடுபடவேண்டும். அவனுடைய 'அர்த்தமற்ற' பயத்தினைப் பற்றி ஆதரவுடன் பேச வேண்டும். பேச்சு அதட்டலாக இல்லாமல் அந்நியோன்னியமாக அமைய வேண்டும். மருத்துவர், அவனுடைய நோயைக் களைந்து உடல் நிலையைச் சீர்படுத்தவே உள்ளார் என்பதை அவனிடம் தெளிவுபடுத்த வேண்டும்.

**வீட்டில் ஒரு புதிய குழந்தையின் பிரவேசம்!**

**அவனுள் புதியதொரு விழிப்பு!**



அவன்தான் வீட்டில் மூத்தவன். பெற்றோரால் செல்லமாக வளர்க்கப்பட்டவன். பெற்றோரின் அன்பு முழுவதும் தனக்கே சொந்தம் என்றுஎண்ணிக்கொண்டிருப்பவன். அச்சமயத்தில் பெற்றோர்க்கு இன்னொரு பெண் குழந்தை என்று பிறக்கிறது வைத்துக் கொள்வோம். இப்பொழுது பெற்றோர்களால் 'மூத்தவனை' முன்போலக் கவனித்துக் கொள்ள முடிவதில்லை; நேரமும் கிடைப்பதில்லை. பெற்றோரின் கவனமும் சின்னஞ்சிறு குழந்தையிடம் மட்டுமே லயித்திருக்கும். அச்சமயங்களில் தன்னுடைய தங்கையை ஓர் 'எதிரியைப்' போலவே எண்ணுகின்ற மனப்பான்மை அவனுள் ஏற்படலாம். அவனுள் ஒரு குழப்பமும் தோன்றலாம். தன் தங்கையைப் பார்க்கும் பொழுதெல்லாம்-அம்மாவும், அப்பாவும் அவளைக் கொஞ்சும் போதெல்லாம் அவனுள் எரிச்சல் ஏற்பட்டு, அவன் உள்ளத்தை எந்த அளவில் அலைக்கழிக்கும். தன்னுடைய சந்தோஷத்தில் பங்குக்கு வருவதில் தன் பெற்றோரின் அன்பைப் பகிர்ந்து கொள்வதில் அவள் மேல் அவனுக்குக் கோபம் கோபமாக வரும். மற்றவர்கள் முன்னிலையில் தன் தங்கையின் மீது 'பிரியமாக' இருப்பதாகவே காட்டிக் கொள்வான். ஆனால் அக்குழந்தை தனித்து இருக்கும் பொழுது, அதைக் 'கிள்ளுவது' போன்ற செயல்களினால் தன்னுடைய வெறுப்பைச் செயலாக்குவான்.

இது ஒரு நுணுக்கமான மன நிலை. இதுபோன்ற சமயங்களில் இருவரையும் தனித்து இருக்க அனுமதிக்கக்கூடாது. அம்மா என்ற முறையில், அவனிடம் முன்புபோலவே தற்போது அன்பாக இருப்பதாகக் கூறவேண்டும். அவனைக் கொஞ்சுவதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். முடிந்தவரை, பிறந்திருக்கும் குழந்தையைக் குளிப்பாட்டுவது, கொஞ்சுவது போன்றவற்றை அவன் உறங்கும் சமயங்களில் செய்வது மிகவும் நல்லது, இச் செயல்களால் அவனுடைய மனநிலை காலப்போக்கில் மாறிவிடும். தன்னுடைய தங்கையிடமும் அன்பு கொள்ள ஆரம்பித்து விடுவான்.

தந்தை என்ற முறையில் அவனிடம் மிகவும் சிரத்தை கொள்ள வேண்டும். இச்சமயங்களில் அவனுடைய மனம் பெரும்பாலும் தந்தையையே நாடும். தங்கையின் மீதுள்ள வெறுப்பு, அம்மாவின் மீது படர்ந்து (இது மிகவும் கொடூரம்) தந்தைமீது அன்பு கொள்ளத் தலைப்படுவான். இச்சமயங்களில் தந்தையின் கடமை அவன் விஷயத்தில் அதிகமாகிறது. தாயும், தந்தையும் சேர்ந்து இச்சமயங்களில் அவனிடம் தேவையான அளவு அக்கறை காட்டி, அவனுடைய 'இந்த' மன நிலையை மாற்றுவதில், விழிப்புடன் இருக்க வேண்டும்.

**'மனிதனாக' வாழப் பழக்குங்கள்!**



இன்றைய 'அவன்தான்' நாளைய காந்தியாகவோ, நேருவாகவோ, அண்ணாவாகவோ மாறுபவன். இதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுப்பது பெற்றோர்களின் உயரிய கடமையல்லவா? இக்குழந்தைப் பருவத்தில் இவன் மீது காட்டும் சிரத்தைதான் மன இயல்பு ரீதியிலான சிரத்தை, நாளை அவன் மகோன்னதமாக விளங்க உதவும்.

(நன்றி: சர்வோதயம்)



# திறம் படச் செயல்படும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை

சுற்றுலாப் பயணிகள் விரும் பத்தக்கதாக-அரும் பொருட்களின் களஞ்சியமாக தென்னகம் விளங்குகிறது.

இந்தியாவில் தென்னாட்டில் நீங்கள் சுற்றுப்பயணம் செய்ய விரும்பினால் முதலில் நீங்கள் செல்ல வேண்டிய ஊர் பழமை வாய்ந்ததும் புகழ் மிக்கதுமான சென்னை மாநகருக்குத்தான்.

சென்னையில் தங்கும் வசதி ஒருபோதும் பிரச்சனை அல்ல. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், உள்ளூர் சுற்றுலா முகவர்களும் ஒரு சிறுகையேடு வெளியிட்டுள்ளார்கள். இவ்வேட்டின் மூலம் சென்னை மாநகரில் ஒருவர் தங்கும் அறை ரூ. 15 கட்டணத்திலும் இருவர் தங்கும் அறை ரூ. 30 கட்டணத்திலும் குளியல் அறை வசதியுடன் கிடைக்கும் இடங்களை தெரிந்து கொள்ளலாம்.

நீங்கள் பம்பாயில் இருக்கும் பொழுது விடுமுறை நாட்களை சென்னையில் கழிக்க விரும்பினால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 34 அண்ணா சாலை சென்னை-600002 என்ற முகவரிக்கு எழுதினால், உங்களுக்கு எந்த வகையில் தேவையான தங்கும் வசதி வேண்டுமோ அதற்கு உரிய முகவரியை உங்களுக்குத் தெரிவிப்பார்கள். இதில் எந்தச் சிரமம் ஏற்பட்டாலும் நீங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினருடன் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் அவர்கள் செய்வார்கள். இதில் அவர்கள் மிகவும் திறமைசாலிகள். இப்பொழுது டில்லியில் நவநாகரிகமாகச் சொல்லப்படும் ஜனதா சுற்றுலா முறைகளுக்கு முன்னோடியாக விளங்கு



பவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர். செயல் திறன் மிக்கதாக விளங்கும் அவர்களிடம் நமக்கு நன்மதிப்பு மேலோங்கி நிற்கும்.

சென்னை மாநகரில் உணவுப் பிரச்சினையும் பெரிதல்ல. மிக அதிகமான செலவுக்கு உட்பட்டதல்ல. இங்கே சைவ சாப்பாடு ரூ. 2-க்கும் தென்னிந்திய காபி கப் 40 காசுக்கும், டீ கப் 20 காசுக்கும் கிடைக்கிறது.

சென்னை நகர பஸ்களில் பணியாற்றும் நடத்துநர்கள் மரியாதையுடனும் நாகரிகமாகவும் நடந்து கொள்பவர்கள். தமிழ்நாடு முழுவதும் எங்குபோக வேண்டும் என்பதை பற்றி தயக்கம் காட்டாமல் கேட்கலாம். தமிழிலோ, ஆங்கிலத்திலோ உங்கள் கேள்விகளைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

சென்னை மாநகரைச் சுற்றிப் பார்க்க பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்கள் வசதியாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் சென்னை மாநகரின் முக்கிய இடங்களைச் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்க சொகுசு பேருந்துகள் விடுகின்றன. இப்பேருந்துகளில் நபர் ஒருவருக்கு ரூ. 15 கட்டணம்.

இப்பேருந்துகளில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, மியூசியம், தேசிய கலைக்கூடம், வள்ளுவர் கோட்டம், பாம்பு பூங்கா கபாலீசுவரர் ஆலயம், சாந்தோம் மாதாகோவில், மெரீனாகடற்கரை ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுகிறார்கள்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்த்து பயனடைய வேண்டிய இடம் பாம்பு பூங்காவாகும்.

வரலாற்றில் ஆர்வம் உள்ளவர்கள் ஒருநாள் முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டிய இடம் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலூன்றத் தொடங்கிய காலத்திலிருந்து உள்ள ஆவணங்கள் இங்கே உள்ளன.

கோட்டையைச் சுற்றிப் பார்க்கும்போது களைப்படைய தேவையில்லை. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின், பால்விற்பனை நிலையத்தில் அருமையான பால் கிடைக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்துவ சமயத்தைவிட முதிர்ச்சி அடைந்ததாக இந்திய நாட்டிலுள்ள கிருத்துவ சமயம் உள்ளது. அதாவது சுமார் 2000 ஆண்டுகள் முதிர்ச்சி உடையது என்று சொல்லலாம். ஏனெனில் சென்னையில் உள்ள தேவலாயங்கள் கிறிஸ்துவுடன் தொடர்புடைய செயிண்ட் தாமஸ் காலத் உருவானவை. அவர் தங்கியிருந்த சின்னமலையும் அவர் நினைவாக அமைந்துள்ள செயிண்ட் தாமஸ் மவுண்டும் சென்னையில் தான் உள்ளன. பழைமையான சாந்தோம் ஆலயமும் சென்னையில் உள்ளது.

சென்னையில் அரைநாளை கழிக்க விரும்பினால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் ரூ. 20 கட்டணத்தில் மாமல்லபுரத்துக்குச் சென்று வரலாம். மாமல்லபுரம் பழைய துறைமுகம். இங்கு கல்லெல்லாம் கலைபாடும் காட்சிகள் காணலாம் கடற்கரைக்கோயில், கல்லில் செதுக்கப்பட்ட ரதங்கள், காண்பதற்கு அரிய காட்சிகள்.

நீங்கள் சென்னையில் ஒருநாள் தங்குவதாக இருந்தால் காஞ்சிபுரம் திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் சென்று வரலாம்.

இந்தச் சுற்றுப் பயணங்கள் மட்டுமல்லாது நீண்டச் சுற்றுப்பயணங்களுக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் இவர்களுடைய 'பதினொரு நாள்' சுற்றுலா' திட்டம் அனைவருடைய கருத்தையும் கவருவதாக உள்ளது. இப்பயணங்களில் பங்குபெற நீங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கடிதம் எழுதலாம். அவர்கள் உடனடியாக பதில் எழுதுவார்கள்.

[இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் 25-11-78 அன்று,
HUGH & COLLEN GANTZER
எழுதிய கட்டுரையிலிருநது
ஒரு சில பகுதிகள்.]



# நலமான குழந்தை நாட்டின் சொத்து!

Dr. C. திருஞான சம்பந்தம்
Dr. H. பிரமீளா
Dr. மெரிலின் ஜோஸப்

உடல் நலத்துடன் வாழ்தல் என்பதைப் பெரும்பாலான மக்கள் ஏதோ இயல்பாகவே அமைகின்ற ஒன்று என்று கருதுகின்றனர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நலமான குழந்தையே நாட்டின் சொத்து என்பதில் அய்யமில்லை. எனவே, நலமான வாழும் முறைகளை அறிந்து அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

நோயின்மை மட்டுமே நல்வாழ்வு ஆகிவிடாது. நல்ல குடும்பச் சூழ்நிலை, சுற்றுப்புறச் சுகாதாரம் இவற்றின் அடிப்படையில் மனநலம் மற்றும் உடல் நலம் பேணுதலே உண்மையான நல்வாழ்வு ஆகும்.

இத்தகு நலத்தினை அடைய மக்கள் சில பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு அவற்றைக் கடைப்பிடித்து ஒழுக, சில சுய முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய பொறுப்புக்களை தன் சுகாதாரம், சுற்றுப்புற சுகாதாரம், சமுதாய சுகாதாரம் என்ற பிரிவுகளின் கீழ் வரையறை செய்யலாம்.

**தன் நலம் பேணுதல்**

இளம் பருவத்திலேயே இதன் அடிப்படைகள் வலியுறுத்தப் படுகின்றன. வாயைத் துப்புரவாக வைத்துக் கொள்ளாவிடில் பற்சொத்தை, டல்வலி, பல்லிளைப்பு நாண்நோய் (Pyorrhoeo) முதலிய நோய்கள் ஏற்படும் என்பதை அறிந்து உணவுக்கு முன்னும் பின்னும் வாயைத் துப்புரவு செய்ய வேண்டும் என்பதை மக்கள் உணரவேண்டும்.

இதேபோல் அழுக்கடைந்த தோலில் கிருமித்தாக்குதல் ஏற்பட்டு சொறி, சிரங்கு முதலியன தோன்றுமாதலால் தினமும் குளித்து உடல் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும்.

சரியான தூக்கமின்மை, சோர்வு, கவனக்குறைவு முதலியவற்றிற்கு அடிகோலுமாதலால் தகுந்த அளவு உடற்பயிற்சியும் ஓய்வும் தேவை.

பாதுகாக்கப்படாத தலைமுடியில் பேன், ஈறு முதலியன தோன்றுமாதலால் தலைமுடியைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**தவறான பழக்கங்கள்**

தவறான பழக்கங்கள் உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்கின்றன. உதாரணமாக ஓடும் வண்டியில் படித்தல், வெளிச்சம் குறைவான இடத்தில் சிறிய எழுத்துக்களைப் படித்தல், கண்கூசும் வெளிச்சத்தைப் பார்த்தல், புகைபடிந்த சூழ்நிலையில் நீண்ட நேரம் இருத்தல் இவைபோன்ற தவறான பழக்கங்களால் கண் பார்வைக் குறைவு ஏற்படுகிறது.

படிக்கும்போது இடையிடையே கண்களுக்கு ஓய்வு கொடுப்பதுடன், படிப்பதற்கான விளக்கும் நமது இடது பின்புறமிருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். சில உணவுப் பழக்கங்கள் அறியாமையினாலும், சமுதாயச் சூழலினாலும் மதம் மற்றும் இனக் கொள்கைகளினாலும், கலாச்சார பேதங்களினாலும் தவறான பழக்கங்களாக மாறிவிடுகின்றன.





ஆலையில் அரைத்த அரிசி உணவு, அசைவ உணவு உட்கொள்ளாமலிருத்தல், காய்கறிகளைக் கொதிக்க வேக வைத்து உண்ணுதல், சோற்றிலிருந்து கஞ்சியை வடித்துவ்டுதல் எருமைப்பால் கொழுப்பு மிக்கது என்ற நம்பிக்கை முதலியன உடலுக்கு நன்மை தராத—தவறான பழக்கங்களாகும்.

உணவுக்கு இடையிடையே சாப்பிடுவதும், அதிகக் குளிர்ச்சி அல்லது சூடுள்ள பானங்களை அருந்துவதும் தவறான பழக்கங்களே!

பொது இடங்களில் தும்முதல், இருமுதல், சத்தமாகப் பேசுதல் முதலிய பழக்கங்கள் காற்றின் மூலம் கிருமிகள் பரவ ஏதுவாகின்றன.

காசநோய் அம்மை, கக்குவான், தொண்டை அடைப்பான், இன்புளுயன்சா காய்ச்சல் முதலியன இவ்விதமாகக் காற்றின் மூலம் பரவும் நோய்களாகும்.

எனவே இருமும் போதும், தும்மும்போதும் வாயையும், மூக்கையும் துணியால் மூடிக் கொள்ளுதல் மிகச் சிறந்த பழக்கமாகும்.

புகைபிடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கான பழக்கமாகும். புற்றுநோய், இருதய நோய்கள், மாரடைப்பு முதலியன இப்பழக்கத்தின் காரணமாக ஏற்படும் நோய்கள். பெரியவர்கள் புகைபிடித்தலை விட்டொழித்து இளைஞர்களுக்கு முன்னுதாரனமாகத் திகழ வேண்டும்.

பொது இடங்களிலும், விளையாடும் இடங்களிலும், தெரு ஓரங்களிலும் குழந்தைகள் மலம் கழிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதன் காரணமாகத் தண்ணீரின் மூலமும், ஈக்கள் மூலமாகவும் நோய்கள் பரவுகின்றன. டைபாயிட் காய்ச்சல் மூலமும், ஈக்கள் மூலமாகவும் நோய்கள் பரவுகின்றன. டைபாயிட் காய்ச்சல், கொக்கிப் புழுத் தொற்றல், மஞ்சள் காமாலை, காலரா, வயிற்றுப் போக்கு முதலிய நோய்கள் இவ்வண்ணம் பரவுபவையே.

எனவே சுகாதார முறைப்படி அமைந்த கழிப்பிடங்களில் மலம் கழிப்பதும், கழித்தபின் சோப்புநீர் கொண்டு கைகளைக் கழுவுவதும் இத்தகு நோய்கள் பரவாமல் தடுக்க உதவுகின்றன. செருப்பணியாமல் வெறுங்காலுடன் நடப்பதையும் நாம் தவிர்க்க வேண்டும்.

## சுற்றுப்புறச் சுகாதாரம்

குடும்பச் சூழலில் சுகாதாரம் பேணுதல், சமுதாய அளவில் சுகாதாரம் பேணுதல் என இருவகை நிலையில் நலவழி முறைகள் அமைய வேண்டும். இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்தவை.

பாதுகாக்கப்பட்ட குடிநீர், காற்று வசதி உள்ள வீடமைப்புகள், கழிவுநீர் வெளியேற்றம் முதலிய சமுதாய நலம் பேணும் திட்டங்களும், பொது இடங்களில் மலம் கழிக்காமலிருத்தல், நல்ல உணவுப் பழக்கங்கள், கைகள் மற்றும் உடல் சுத்தம் முதலான தன்நலம் பேணும் பழக்கங்களும் ஒன்றிணையொன்று தழுவியவையாகும்.

சமுதாய நலம் பேணுவதில் தனிமனிதனுக்கிருக்கும் பொறுப்பு அளவிடற்கரியது. இத்தகைய தனிமனித உணர்வினாலே தான் வளர்ந்துவரும் நாடுகளில் பல நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன.

அரசினர் மேலும் மேலும் சமுதாய நலம்பேணும் திட்டங்களை நிறைவேற்றும்போது ஒவ்வொரு குடிமகனும் தன் சுகாதாரம் பேணுவதன் மூலம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எனவே நலவழிமுறைகள் முழுமையானவையாகவும் ஒருங்கிணைந்தவையாகவும் தொடர்ந்து நடைபெறுபவையாகவும், சமுதாயத்திற்கு ஏற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

நாம் உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று இருக்கும் இடம் நாம் பழகும் விதம்-இவையே நமது நல்வாழ்விற்கு அடிகோலுகின்றன.

இத்தகைய நல்ல பழக்கங்கள் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிய வேண்டுமானால் இத்தகைய பழக்கங்களை நடைமுறையில் கைப்பிடித்து ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.



# தாய்மார்களுக்கு...!

—டாக்டர் பி. ஆர். சந்தான கிருஷ்ணன்

குழந்தைகளுக்கு நேரிடும் வயிற்றுப் போக்கு, நோய்க் கிருமிகளினால் ஏற்படுகிறது. தோஷம், பல், மந்தம் பல் முளைத்தலினால் பேதி என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை.

நிப்பிள்கள், சூப்பான்கள் முதலியவற்றைக் குழந்தைகள் வாயில் வைத்தலின் மூலம் நோய்க் கிருமிகள் உடலுக்குள் சென்று பேதி உண்டாக ஏதுவாகும்.

தாய்ப்பாலூட்டப்படாத குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது.

தாய்ப்பால் ஒரு சக்திவாய்ந்த பாலுணவாகும்.

குரானின்படி தாய்ப்பாலானது இரத்தத்திற்குச் சமமானது. தாய்ப்பால் எளிதில் ஜீரணமாகக் கூடியது. இதிலுள்ள வினேலிக் அமிலம் சுண்ணும்புச் சத்தை அதிகரிக்க உதவுகிறது. உயிர்ச் சத்து 'சி'யும் தேவைக்கு அதிகமாகவே உள்ளது. தாய்ப்பாலில் மிகவும் சக்திவாய்ந்த A உயிர்ச்சத்து உள்ளது. இதுநோயினின்று பாதுகாப்பளிக்கிறது. லைஸோஸைம் என்ற புரதச் சத்து 300 தடவை பசுப்பாலை விடத் தாய்ப்பாலில் அதிகமாய் உள்ளது.

தாய்ப்பாலைச் சிறப்பான தாகச் செய்வது அதில் இருக்கும் செல்களின் தன்மையினாலும் தான். எல்லாவற்றிற்கும் மேலாக, வளர்ந்து வரும் நாடுகளில், தாய்ப்பாலே சிக்கனமானதாகும்.

அடிக்கடி வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கின் காரணமாக குழந்தையின் உடலிலிருந்து நீர்ச்சத்தும், உப்புச்சத்தும் வெளியேறுவதால் குழந்தை சோர்ந்து, உடல்நீர் வற்றிக் காணப்படும்.

ஆரம்ப நிலையிலேயே உங்கள் டாக்டரிடம் குழந்தையைக் காட்டி அவரது ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுப்பதை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தாதீர்கள்.

ஒரு தம்பளர் நல்ல தண்ணீரில் ஒரு சிட்டிகை உப்பும், 3 கரண்டி சர்க்கரையும் கலந்து இந்த நீரை அடிக்கடி பேதியுள்ள குழந்தைக்கும் கொடுக்க வேண்டும். குழந்தையின் தாகத்தைத் தணிக்கவும் இழந்த நீர்ச்சத்தை ஈடு செய்யவும் இம்முறை மிகவும் சோர்ந்து போகாமல் தடுக்கலாம்.

புட்டிப்பால் தரப்படும் குழந்தைக்கு வழக்கமான அளவைவிட சிறிது அதிகம் தண்ணீர் கலந்து பால் கொடுங்கள். வயிற்றுப் போக்கு ஏற்பட்ட உடனேயே அரிசிக் கஞ்சி, ஏரோரூட் மாவுக் கஞ்சி முதலியவற்றைக் கொடுக்க ஆரம்பிக்காதீர்கள். அப்படிக் கொடுப்பதால் குழந்தை ஊட்டச் சத்துணவின்றி இளைத்துவிடும்.

உணவூட்டும் பாத்திரங்களை, பால் கொடுக்கும் பாட்டில்களை, நிப்பிள்களை ஒவ்வொரு தடவை பால் கொடுக்குமுன்னும் கொதிக்கும் நீரில் சுத்தம் செய்யுங்கள். குழந்தைக்கு உணவூட்டுமுன் உங்கள் கைகளைச் சோப்புப் போட்டுக் கழுவி நன்றாகச் சுத்தம் செய்யுங்கள். வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், காப்பி, கை மருந்துகள் குழந்தைக்குக் கெடுதலையும், ஆபத்தையும் விளைவிக்கின்றன. காப்பி, டீ முதலியன கெடுதல், தனிப்பாலே சிறந்தது. உங்கள் குழந்தைக்கு டானிக்குகள் புஷ்டி உண்டாக்காது. நல்ல உணவே தேவை!



# வானொலி, தொலைக்காட்சியில்...

சென்னை வானொலியில் சிறுவர்களுக்காகப் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

சனிக்கிழமைதோறும் 'மழலை அமுதம்' என்னும் நிகழ்ச்சியும், ஞாயிறுதோறும் 'சிறுவர் சோலை என்னும் நிகழ்ச்சியும் ஒலிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் சிறுகதை, பாடல்கள், வில்லுப் பாட்டு, நாடகம், இசை, வினாடி வினா, விடுகதைகள் போன்றவை சிறுவர்க்கேற்ற வகையில் சேர்க்கப்படுகின்றன.

இவையன்றி சென்னை வானொலி நிலையம் சுதந்தர நாள், குழந்தைகள் நாள்போன்ற விழாக்காலங்களில் தனி நிகழ்ச்சிகள் பலவற்றை வெளியிடங்களில் நடத்தி, பிறகு அவற்றை ஒலிபரப்புகின்றன. இந்நிகழ்ச்சிகள் பல்வேறு மொழிகளில் நடக்கின்றன. குழந்தைகளின் திறமையை வெளிப்படுத்த இவை உதவுகின்றன.

ஆண்டுதோறும் 'வானொலி சிறுவர் நாடக விழா' ஒன்றை நடத்தி நீதிபுகட்டும் சிறந்த நாடகங்களை வழங்கி வருகின்றது.

இந்த சிறுவர் நிகழ்ச்சிகள் தமிழ் தவிர ஆங்கிலம், தெலுங்கு மொழிகளிலும் ஒலி பரப்பாகின்றன.

**கல்வி ஒலிபரப்பு**

சிறுவர்க்கான நிகழ்ச்சிகள் தவிர பள்ளி மாணவ மணிகளுக்கான கல்வி ஒலிபரப்புகளையும் சென்னை வானொலி ஒலிபரப்பி வருகின்றது. நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளிகளுக்கென நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் திருச்சி வானொலி மூலமாக அஞ்சல் வழிக் கல்வியினை ஒலிபரப்பி வருகின்றது.

**தொலைக்காட்சியில்......**

சென்னைத் தொலைக்காட்சியில், சிறுவர்களுக்காகக் 'கண்மணிப் பூங்கா' என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. நீதிக்கதைகள் நாடகங்கள், நடனம், அறிவியல் முதலான நிகழ்ச்சிகள் சிறுவர், சிறுமியரை வெகுவாகக் கவர்கின்றன.



# இளம் பிள்ளை வாதத்தைத் தடுக்க இனிய வழி

—டாக்டர். கே. ஸ்ரீராம்.
முடநீக்கு இயல் வல்லுநர்.

'போலியோ' அல்லது 'இளம் பிள்ளைவாதம்' வைரஸ் கிருமிகள் நரம்பு மண்டலத்தைத் தாக்குவதனால் ஏற்படும் கொடிய தொத்து நோயாகும்.

நமது மருத்துவ மனையின் வருடத்திற்கு 1,400 குழந்தைகள் போலியோ நோய்க்காகச் சிகிச்சை பெறுகின்றனர். 5 மாதத்திலிருந்து 5 வயதுக்குள்ளான குழந்தைகள் இந்நோயால் பெரிதும் தாக்கப்படுகின்றனர். இவர்களில் 100-க்கு 7 பேர் இறக்கின்றனர். மற்றக் குழந்தைகள் கை, கால் உறுப்புகளின் செயல்களை இழக்கின்றனர்.

**நோயின் கடுமை:**

இந் நோயினால் ஏற்படும் வாதம் ஆரம்பநிலையில் நோயின் தீவிரத்தைப் பொறுத்தும், அதன் பின்னர் அடுத்து வரும் இரண்டு, மூன்று வருடங்களில் கை, கால்களில் இழந்த பலத்தை மீண்டும் பெறத் தொடங்குவர். இச்சமயத்தில் அளிக்கப்படும் வலிவிழந்த தசைகளுக்கான பயிற்சிகள் ஊனங்கள் நிரந்தரமாகிவிடாமல் தடுக்கின்றன.

**கால்கள் வலுவிழந்து விட்டால்**

வலுவிழந்த தசைகளுக்குத் துணைபுரிய மாவுக்கட்டுகளினால் தசைகளுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். அதோடு செய்கை முறை கலிபர்களும் (CALIPERS) பயன்படுத்தலாம்.

**கைகள் செயல் இழந்து விட்டால்**

குழந்தைகள் சாப்பிடவும், தன் சுகாதாரம் பேணவும், உடை உடுத்தவும் பெற்றோரின் உதவி தேவைப்படும். சில குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சையும், மாவுக்கட்டுகளும் முடநீக்கு இயல் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சையும், மாவுக்கட்டுகளும் முடநீக்கு இயல் நிபுணரின் ஆலோசனைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**உடலின் நடுப்பகுதித் தசைகள் வலுவிழந்தால்....**

குழந்தைகள் உட்காரக்கூட சிரமப்படுவார்கள். முடநீக்கு இயல் மருத்துவர் அறுவைச் சிகிச்சை மூலம் இக்குறையை நிவர்த்திக்க வழியுண்டு.

நல்ல உடல் நலத்துடன் திகழும் குழந்தைகளைக்கூட இந் நோய் தாக்கக் கூடுமாதலால், இளமையிலேயே நோய்த்தடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து மாதம் ஒரு முறை வீதம் தடுப்பு சொட்டு மருந்து (POLIO DROPS) ஐந்து முறை கொடுக்க வேண்டும். பிறகு இரண்டாம் ஆண்டு முடிவிலும், ஐந்தாம் ஆண்டு முடிவிலும் ஆக இருமுறை அளிக்க வேண்டும்.

தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பயன்படுத்துவதன் மூலமும், ஈக்களை ஒழிப்பதன் மூலமும் இந்நோய் பரவுவதை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

**சேவை நிறுவனங்களின் பணிகள்**

1. இதுவரை போலியோ தடுப்பு மருந்து தரப்படாத குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து தடையின்றிக் கிடைக்க, பெருமளவில் நோய்த் தடுப்பு இயக்கங்களை சேவை நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

2. நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கும் பெற்றோர்களின் வீடுகளுக்குச் சென்று ஆறுதல் அளிக்கும், நம்பிக்கை ஊட்டும் வகையில் தேறுதல் கூறலாம்.



3. நோயுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை முறை உபகரணங்கள் (CALIPERS) அளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

4. இளமையிலேயே நோயினால் பீடிக்கப்பட்டு ஊனமடைந்த பெரியவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இளம்பிள்ளை வாத நோயினால் தாக்கப்படும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சி பாதிக்கப்படுவதில்லையாதலால், மற்ற குழந்தைகள் படிக்கும் பள்ளியிலேயே இக்குழந்தைகளும் பயிலலாம். மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்கூட இளம்பருவத்தில் போலியோ நோயால் பீடிக்கப்பட்டவர்தான். இடைவிடா முயற்சியால் அமெரிக்க நாட்டின் தலைவராக அவர் விளங்கினாரே! முயற்சி திருவினையாக்கும்.

# அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டு

1979·International
Year of the Child

# 1979

குழந்தைகளின் சிறப்பான நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு 1979-ஆம் ஆண்டை அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாக அய்க்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இந்த ஆண்டின் இலட்சியங்கள் வருமாறு:

பொதுமக்களிடையேயும், திட்டங்கள், கொள்கைகள் வகுப்போரிடையேயும் குழந்தைகளின் தனித் தேவைகளின் உணர்வை உயர்த்திக் காட்டுவது.

தேசீய மட்டத்தில், குறுகிய காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கவல்ல, நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை ஊக்குவிப்பது.

குழந்தைகளின் நல்வாழ்வு பற்றிய திட்டங்களை மறு பரிசீலனை செய்யுமாறு அரசினை வலியுறுத்துவதுடன், மனம் மற்றும் உறுப்புக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் அய்க்கிய நாடுகள் சபை இயற்றிய ஜெனிவா சாசனம் என அழைக்கப்படும் குழந்தைகளின் உரிமைப் பட்டயம் (Rights of the Child), மனித சமுதாயம் குழந்தைகளுக்கு ஆற்ற வேண்டிய தொண்டினையும், அளித்திட வேண்டிய பாதுகாப்பையும் வலியுறுத்துகிறது. குழந்தைகளைப் பேணுவது இனம், மொழி, மதம் தேச வரம்புகட்கு அப்பாற்பட்டதாக இருப்பதுடன், அவர்களின் இயல்பான உலகியல், ஒழுக்க ஆன்மீக வளர்ச்சிக்குரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். நோயுற்றிருந்தால் பேண வேண்டும்; மன வளர்ச்சி குன்றியிருந்தால் செம்மைப்படுத்திட வேண்டும்; அனாதையாகவோ, ஆதரவின்றியோ இருந்தால் பாதுகாப்பும், பராமரிப்பும் தந்திட வேண்டும். சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் முழுப்பயனையும் பெற்று, குழந்தைகள் தங்கள் வாழ்வினை உரிமையுடன் நடத்தும் கல்வியும் அளிக்கப்படவேண்டும். எல்லாவிதமான சமூகச் சுரண்டல்களினின்றும் பாதுகாக்கப்பட வேண்டும். இவைகளை அச்சாசனம் வலியுறுத்துகிறது.

நமது நாட்டில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 24 கோடி. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் இது 42 சதவீதமாகும். ஆப்பிரிக்கக் சண்டத்தின் மக்கள் தொகையைவிட இது அதிகம்! உலக மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தை வகிக்கும் நம் நாட்டுக் குழந்தைகள் தாய்ப்பாலின் வளர்ச்சி குன்றியும், பலவிதமான தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டும், வளரும் பருவத்தில் சத்துணவு கிடைக்காத காரணத்தால், நோஞ்சான்களாகவும், சவலைகளாகவும் காணப்படுகின்றனர். கல்வியறிவின்மை, குறைந்த வருமானம், குழந்தைகள் பராமரிப்பில் அக்கறையின்மை இவையனைத்துமே நம் நாட்டில் குழந்தைகள் முன்னேற்றத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள்.

கடந்த 20 ஆண்டுகளாக பண்டித நேருவின் பிறந்த நாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடி வருகிறோம். இத்துடன் தாய் சேய் நலத்திட்டங்கள் பல உருவாக்கி இதன் மூலம் குழந்தைகளின் ஊட்ட உணவுத் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலப்பணிகள், ஊனமுற்ற குழந்தைகளின் மறுவாழ்வு நிலையங்கள் முதலியவற்றைச் செயல்படுத்தி உள்ளோம். இவற்றையெல்லாம் செயல்படுத்தியும் கூட நம் நாட்டில் ஓராண்டிற்குள் இறக்கும் குழந்தைகளின் விகிதம் ஆயிரத்திற்கு 125 ஆகவே உள்ளது. இதே விகிதம் இங்கிலாந்தில் 18 ஆகவும், ஸ்வீடனில் 12 ஆகவும் உள்ளது. மொத்த இறப்புகளில் 40 சதவீதம் முதல் அய்ந்து ஆண்டுகளுக்குள் ஏற்படுகிறது. நகர்ப்புறங்களைவிட, கிராமப்புறங்களில் இந்த இறப்புகளில் 66 சதவீதம் போதுமான ஊட்டச் சத்துணவில்லாததால் ஏற்படுகிறது எனக் கண்டறிந்துள்ளனர். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக டைரக்டர் ஜெனரல் டாக்டர் கோபாலனின் கருத்துப்படி நான்கு வயதிற்குள் நமது நாட்டுக் குழந்தைகளில் 35 சதவீதத்தினர் இறந்துவிடுகின்றனர். இந்த நிலை 1951-ல் காணப்பட்டது. 1971வரை இந்நிலையே நீடிக்கின்றது.

சமீபத்தில் புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்து நாட்டுக் குழந்தைகள் மாநாட்டில் பேசிய துருக்கி நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அய்ஸான் டோக்ராமஸியின் கூற்றுப்படி, பஞ்சாபில் காணப்படும் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம், ஸ்வீடன் நாட்டில் இந்த வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் இறப்பு விகிதத்தைவிட 72 சதவீதம் அதிகமாகும். இவையெல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் போதுமான ஊட்டச்சத்துணவு இல்லாமையே ஆகும்.

எளிதில் தடுக்கப்படக்கூடிய நோய்களான வயிற்றுப்போக்கு, டைபாயிட் காய்ச்சல், காசநோய் கக்குவான், டிப்தீரியா, ரண

# விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி—



# எலி

## எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி ரோடா:ஃபாரின்

(ஆன்டிகோவாகுலண்ட்)




மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்படவேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இந்நிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிருர்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனல் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்ரும் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனல் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, லட்சத்தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி. விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

**pci பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,**

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001. தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018. தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

**pci பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்**

*சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.*

எங்கும் கிடைக்கிறது.

FDS PCI 2750 TAM

ஜன்னி, இளம்பிள்ளை வாதம் முதலியவை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றனவேயொழியக் குறைந்தபாடில்லை. மருத்துவமனையில் 1973-ஆம் ஆண்டு வயிற்றுப் போக்கிற்காக 6222 குழந்தைகள் சிகிச்சையளிக்கப்பட்டனர். 1977-ல் இந்த எண்ணிக்கை 9329. சுமார் 50 சதவீதம் அதிகம். இதே போல் டைபாயிட் காய்ச்சல் கண்ட குழந்தைகள் 532 லிருந்து 740 ஆக அதிகரித்துள்ளனர். மதாஸ்மஸ், குவாலியோர்கர் என அழைக்கப்படும் ஊட்டச் சத்துணவுக் குறைவால் ஏற்படும் நோய்களும் அதிகரித்துள்ளன. மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் எடுத்த கணக்கின்படி அய்ந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வருடத்திற்கு சுமார் 400 பேர் குருடாகிப் போகின்றனர். என அறியப்படுகிறது.

தடுப்பு முறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நமக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளுக்கெல்லாம் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் காரணம் காட்டுவது மருத்துவத் துறையினருக்கும் பழக்கமாகப் போய்விட்டது. பிறப்பு விகிதம் நமது நாட்டில் அதிகம்தான் என்பது ஒருபுறமிருப்பினும் அதே அளவு உணவுப் பொருள் உற்பத்தியும் ஏன் நுகர் பொருட்களின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது என்ற காரணத்தால் திட்டங்களின் தோல்விகளுக்கெல்லாம் மக்கள் தொகைப் பெருக்கத்தின் மீதே பழியைப் போடுவது என்பது சரியானதல்ல. உண்மையான காரணம் மக்களின் அதுவும் குறிப்பாக வசதிமிக்கோரின் அசிரத்தையான போக்கும், திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள ஆர்வமின்மையுமே ஆகும். நமது மக்களுக்கு நமது கடமைகளை நாம் சரியாக நிறைவேற்றியுள்ளோமா என நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் இந்த நேரத்தில், ஆக்கப் பூர்வமான குழந்தைகள் நலப் பணிகளை நிறைவேற்றுவதில் நம்மை முழு மனத்துடன் அர்ப்பணித்துக் கொள்ள உறுதி மேற்கொள்ள வேண்டும். இத்தகைய ஓர் உறுதியுடன் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கான ஆரம்பகால நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முனைவோம்!

## 1979–ஆம் ஆண்டுக்குரிய அரசு பொது விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | திங்கட்கிழமை | — ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| ,, | 13 | சனிக்கிழமை | — போகி |
| ,, | 15 | திங்கட்கிழமை | — திருவள்ளுவர் நாள் |
| ,, | 26 | வெள்ளிக்கிழமை | — குடியரசுத் திருநாள் |
| பிப்ரவரி | 10 | சனிக்கிழமை | — மீலதிநபி |
| மார்ச் | 28 | புதன்கிழமை | — தெலுங்கு புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 10 | செவ்வாய்க்கிழமை | — மகாவீரர் பிறந்த நாள் |
| ,, | 13 | வெள்ளிக்கிழமை | — தூய வெள்ளிக்கிழமை |
| மே | 1 | செவ்வாய்க்கிழமை | — மே நாள் |
| ஆகஸ்ட் | 15 | புதன்கிழமை | — விடுதலைத் திருநாள் |
| ,, | 25 | சனிக்கிழமை | — ரம்ஜான் |
| அக்டோபர் | 1 | திங்கட்கிழமை | — ஆயுத பூஜை |
| ,, | 2 | செவ்வாய்க்கிழமை | — காந்தி பிறந்த நாள் |
| ,, | 19 | வெள்ளிக்கிழமை | — தீபாவளி |
| நவம்பர் | 1 | வியாழக்கிழமை | — பக்ரீத் |
| டிசம்பர் | 1 | சனிக்கிழமை | — மொகரம் |
| ,, | 25 | செவ்வாய்க்கிழமை | — ஏசு கிறிஸ்து பிறந்த நாள் |

*மேற்குறிப்பிட்ட நாட்களும், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமைகளும் அரசு விடுமுறை நாட்களாகும். பொங்கல் நாள் (14 1.1979), விநாயக சதுர்த்தி (26.8.1979), ஆயுதபூஜை (30.9.1979) ஆகியவை வழக்கமான பொது விடுமுறை நாட்களான ஞாயிற்றுக் கிழமைகளில் வருவதால், அவை மேலே குறிக்கப் பெறவில்லை.*



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனாமல் பூசிய செம்புக் கம்பிகள்



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை, நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# தீயவை தொடாதே!

—டாக்டர் M. S. இராமகிருஷ்ணன்.

கொதிக்கும் எண்ணெய், தண்ணீர் மற்றும் சூடான காபி, டீ முதலிய திரவங்களாலும், நெருப்பினாலும் உடலில் ஏற்படும் சுட்ட புண்கள் சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ள குழந்தைகளிடையே அதிகம் காணப்படுகின்றன.

இந்தக் குழந்தைகள் வாழும் சூழ்நிலையும் இத்தகைய தீயினாற்சுட்ட புண்கள் ஏற்படக் காரணமாக உள்ளது. மின் விளக்கு இல்லாத குடிசைகளில் பாதுகாப்பின்றி எரியும் மண்ணெண்ணெய் விளக்கைச் சுற்றிக் குழந்தை தவழ்ந்து விளையாடும். விளக்கின் ஒளியில் கவரப்பட்டு அதை இழுக்கும் குழந்தை தீக்காயங்களுக்கு ஆளாகிறது.

இதே போல்தான் மேடையின்றித் தரையில் அடுப்பை வைத்துச் சமைக்கும் போது, எரியும் விறகைக் குழந்தை இழுக்கிறது. அல்லது கொதிக்கும் காப்பியிலாவது, குழம்பிலாவது கையை வைத்து விட்டால் கையோ, உடலின் பாகங்களோ வெந்துபோக வாய்ப்புள்ளது.

தூக்கத்தில் புரளும் குழந்தை, பாதுகாப்பின்றி எரியும் விளக்கைத் தட்டிவிடும்போது உடைகளில் தீப்பற்றியோ, நேரடியாகவோ தீக்காயங்கள் ஏற்படுகின்றன. நாகரிகத்தின் சின்னமாக விளங்கும் நைலான் ஆடைகளை அணிவதினால் எளிதில் தீப்பற்ற வாய்ப்புள்ளது.

ஏழைகளின் வீட்டில் இந்தச் சூழ்நிலையில் விபத்துக்கள் நேரிடுகிறது என்றால், வசதி மிகுந்தோர் இல்லங்களில் விபத்து வேறுவிதமாக நிகழ்கிறது.

நாகரீக முறைப்படி கட்டப்பட்ட வீடுகளில் மின்ஸ்விட்சுகளும், பிளக்குகளும் (Plugs) சுவரின் அடிப்பகுதிகளில் அமைக்கப்படுவதால் தவழ்ந்து விளையாடும் குழந்தை பிளக்குகளின் ஓட்டைகளில் விரலை நுழைப்பதாலும் மின் அதிர்ச்சிக்குள்ளாகி சுட்ட காயங்களும் ஏற்படுகின்றன. பட்டாசுகள் கொளுத்துவதனால் ஏற்படும் தீக்காயங்கள் அனைவரும் அறிந்ததே!

''நெருப்பை நெருங்காதே'' என்று சொல்வது சுலபமே தவிர, கவனமாக இருப்பதன் மூலம்தான் தீக் காயங்களைத் தவிர்க்க முடியும். கீழ்க்காணும் குறிப்புகள் இத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க உதவும்.

1. கண்ணாடி மூடியிட்ட பாதுகாப்பான விளக்குகளையே வீட்டில் உபயோகிக்க வேண்டும். அவற்றையும் குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைக்க வேண்டும்.

2. பாதுகாப்பின்றி எரியும் மண்ணெண்ணெய் விளக்கினருகிலேயோ, எரியும் மண்ணெண்ணெய் அடுப்பின் அருகிலேயோ, குழந்தைகள் விளையாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. பட்டாசு கொளுத்தும் போது பெரியவர்கள் அருகில் இருத்தல் வேண்டும்.

4. தாய்மார்கள் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது குழந்தைகளை வேறிடத்தில் விளையாட விடவேண்டும்.

**தீச் சுட்ட புண்கள் ஏற்பட்டவுடன் அனுசரிக்க வேண்டிய விதி முறைகள் :**

1. தீச் சுட்ட புண்களின்மேல் தண்ணீரையோ, மையையோ ஊற்றக்கூடாது.

2. உடலிலுள்ள ஆடைகளைக் களைந்துவிட்டு தடித்த கம்பளியோ, துணியோ போர்த்து உடனே அருகிலேயே மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

3. நெருப்புக் காயங்களுக்கான சிகிச்சையை விபத்து நேரிட்டவுடனேயே ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிடில் பின் விளைவுகள் மோசமானவையாக இருக்கும். இதன் காரணமாக ஏற்படும் ஊனங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

எனவே வருமுன் காத்தலே தீ விபத்துக்களினால் ஏற்படும் தீமைகளைத் தடுக்கும் தாரக மந்திரமாகும்.

## வகையறிந்து வளர்த்திடுவோம்

குறைகூறியே வளர்க்கப்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக் கொள்கிறது.

அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.

கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வாழ்கிறது.

அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகிறது.

சகிப்போடு வளரும் குழந்தை பொறுமையைக் கடைப்பிடிக்கிறது.

ஊக்குவிக்கப்படும் குழந்தை மனத்திண்மை பெறுகிறது.

புகழப்படும் குழந்தை பிறரை மெச்சக் கற்றுக்கொள்கிறது.

நேர்மையோடு வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக் கொள்கிறது.

பாதுகாக்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது.

நடப்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்கக் கற்றுக் கொள்கிறது.

# தொரப்பள்ளியில் ராஜாஜி நூற்றாண்டு நிறைவு விழா



டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் மூதறிஞர் ராஜாஜி பிறந்த ஊரான தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் தமிழக அரசின் சார்பில் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று அந்த ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

விழாவிற்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''திருச்செங்கோட்டில் ஆசிரமம் அமைத்து, தீண்டாமை எதிர்ப்பு, மதுவிலக்கு ஆகியவற்றுக்குக் கிராமம் கிராமமாகச் சென்று, ராஜாஜி பாடுபட்டார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

''ராஜாஜியைப் பின்பற்றி இன்றைய தமிழக அரசு மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்துகிறது. பஞ்சமா பாதகமாகிய மது அருந்துவதைத் தடுக்க மதுவிலக்கு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு அவசரச் சட்டத்தால் ராஜாஜியின் கனவை நனவாக்குகிறது இன்றைய தமிழக அரசு''

தமிழ்நாடு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு எம். ஜானகிராமன் அவர்கள், ராஜாஜி அஞ்சல் தலை அடங்கிய ஆல்பத்தை விழா மேடையில் நிதியமைச்சர் அவர்களிடம் வழங்கினார். மூதறிஞர் ராஜாஜியின் அஞ்சல் தலையை நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்டார். அப்போது அவர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

''ராஜாஜியுடன் பழகிய சில காலங்களிலேயே அவரைக் கருத்தாழம் மிக்க கொள்கைவாதியாகவும், தெளிந்த அரசியல்வாதியாகவும், சிறந்த பேச்சாளராகவும், ஒழுக்க சீலராகவும், சிறந்த சிந்தனையாளராகவும், சிறந்த பார்லிமெண்டரியனாகவும், வல்லமை வாய்ந்த வழக்கறிஞராகவும் கண்டிருக்கிறேன்.

''எந்தக் காரியத்தை எடுத்தாலும் ஆழ்ந்து சிந்தித்து முடிவு எடுப்பவர். எதிர்ப்பு வந்தாலும் உறுதியாக இருந்தவர்.

''அரசியல் வாழ்வில் ராஜாஜி கண்ட சாதனைகளை வரும் தலைமுறையினர் படிப்பதற்காக இதுபற்றிய நூல் ஒன்றை வெளியிடத் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.''

**தொரப்பள்ளியில் மூதறிஞர் ராஜாஜி பிறந்த இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள ராஜாஜி புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்களும் பார்வையிடுகின்றனர்.**



''ராஜாஜி உயிருக்கு உயிராய் நேசித்த இரு இலட்சியங்களான மதுவிலக்கு தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதென சூளுரை ஏற்பீர்!''

விழாவில், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைத்தார்கள்.

**ராஜாஜி வசித்த வீடு நினைவு இல்லமாக மாற்றப்பட்டது.**

தருமபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகே உள்ள தொரப்பள்ளி கிராமத்தில் மூதறிஞர் இராஜாஜி வசித்த இல்லத்தை தமிழ்நாடு அரசு நினைவு இல்லமாக்குகிறது.

இந்த இல்லத்திற்கு இதுவரை ரூ. 30,000 வரை தமிழக அரசினரால் செலவழிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவு இல்லத்தில் மூதறிஞர் ராஜாஜி இயற்றிய நூல்களைக் கொண்ட நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்படும்.

மூதறிஞர் ராஜாஜியின் வாழ்க்கையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு, அவர் வகித்த பதவிகளை நினைவுபடுத்தும் 120-க்கு மேற்பட்ட புகைப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.



ராஜாஜியின் மனைவி அலர்மேலு மங்கம்மாள்

இந்த இல்லத்தில் அவரது மார்பளவு சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. தொரப்பள்ளி கிராமம் சிறுசிறு குன்றுகளையும் வயல்களையும் பின்னணியாகக் கொண்டது. இந்தக் கிராமத்தில் மொத்தம் 50 வீடுகள் இருக்கின்றன. அதில் மூதறிஞர் ராஜாஜி வசித்த இல்லமும் ஒன்று. நல்ல தூய்மையான சுற்றுப்புறச் சூழ்நிலையில் ராஜாஜியின் இல்லம் நினைவ் இல்லமாக விளங்குகிறது.

மாண்புமிகு நிதியமைச்சா திரு கி. மனோகரன் அவர்கள் பொருட்காட்சியைத் ,கி வைத்தார்.

''மூதறிஞர் ராஜாஜியின் 100-வது பிறந்தநாளையொட்டி அவர் வாழ்ந்த வீட்டை தேச உடைமையாக்கி நினைவுச் சின்னம் ஆக்க வேண்டும் என்று முடிவு செய்தபடி இந்த விழா நடக்கின்றது.

''ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுத, வரலாற்று அறிஞர்கள் முன்வர வேண்டும். அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்யும். ராஜாஜி படித்த உயர்நிலைப் பள்ளிக் கூடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யும்.

''ராஜாஜி பிறந்த வீட்டில் நுழைந்ததும் புனிதமான ஓர் உணர்வைப் பெற்றேன். எவ்வளவு பெரிய அறிவாளி, இந்தச் சின்ன கிராமத்தில், சின்ன வீட்டில் வறுமைத்தேளால் கொட்டப்பட்டுப் போராடி வெற்றி பெற்று இருக்கிறார். சில ஊர்கள் அங்கு பிறந்த மனிதர்களால் பெருமை அடையும். அதற்கு ராஜாஜி பிறந்த தொரப்பள்ளி சான்றாகும்.'' என்று குறிப்பிட்டார்.

## ராஜாஜி அஞ்சல் தலை

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவின் தொடர்பாக, மத்திய அரசின் அஞ்சல் துறை 25 காசு விலையுள்ள — ராஜாஜியின் உருவப்படம் பொறிக்கப் பெற்றுள்ள — அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்புச் செய்திருக்கிறது. 1978 டிசம்பர் 10ஆம் நாளன்று டில்லியில், குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் இந்தச் சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டார்.




தமிழகத்தில் ராஜாஜியின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு டிசம்பர் 10ஆம் நாளன்று ராஜாஜி பிறந்த ஊரான தொரப்பள்ளியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அவ் விழாவில், ராஜாஜி அஞ்சல் தலையை மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் வெளியிட்டார்.

ராஜாஜி அவர்கள் நாடாளுமன்றத்தில் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றபோது எடுக்கப் பெற்ற புகைப்படம், இந்த அஞ்சல் தலையில் இடம் பெற்றிருக்கிறது. **

குழந்தைக்குக் காசநோய் என்பது, பெரியவர்களுக்கு வருவது போல ஜுரம், சளி, எடைக் குறைவு என இப்படி வருவதில்லை.

நன்கு கொழு கொழுவென இருக்கும் குழந்தைக்குக் கூட காசநோய் வரக்கூடும்.

உங்கள் குழந்தைக்குக் காசநோயா என்பதை அறிய கீழ்க் காணும் குறிப்புகளை மனத்திற் கொள்ளுங்கள்.

(1) நீண்ட நாள் மருந்து மாத்திரை ஊசிகளால் தீராத ஜுரம் (2) குழந்தையின் எடையில் படிப் படியாகக் குறைதல் (3) குழந்தைக்குப் பசியின்மை மற்றும் சோகை. (4) தொடர்ந்து மருந்து கொடுத்தும் தீராத சோகைத்தன்மை, (5) கண்டமாலை எனப்படும் கழுத்துப் புறத்தில் சிறு நெரிக்கட்டிகள் அல்லது அக்குள் தொடைபோன்ற இடங்களில் நெரிக்கட்டிகள். (6) வயிற்றில் ஈரல் கட்டிகள் மற்றும் வயிறு உப்புசம் (7) சிகிச்சை அளித்தும் தீராத வயிற்றுப் போக்கு, மற்றும் காதில் சீழ் வடிதல், கை கால்களில் ஆறாத ரணப்புண். (8) ஊட்டச்சத்து துணவு முறை நிலையில் உள்ள நோஞ்சான் குழந்தை அல்லது சொரைக்காய் அம்மை நோய்-சத்துணவு கொடுத்தும் தீராத நிலை. (9) மீண்டும், மீண்டும் ஏற்படும் மார்ச்சளி நோய், அள்ளை மாந்தம், ஆஸ்த்துமா மற்றும் அதிலிருந்து பழைய நிலைக்கு வரமுடியாத தன்மை. (10) தட்டம்மை, கக்குவான் போன்ற பொது நோய்களால் பாதிக்கப்பட்டு பழைய நிலைக்குத் திரும்பாத தன்மை. (11) மருந்துகளுக்கு தீராத தலைவலி, வாந்தி, ஜுரம்-மற்றும் மூன்று நாட்களுக்குள் தீராத நிலையில்-நினைவிழத்தல், (12) எந்த ஒரு மூட்டிலாவது வீக்கம், ஊனம் அல்லது எலும்போடு ஒட்டிய புண். (13) மீண்டும் மீண்டும் வரும் வயிற்றுவலி. (14) வலியில்லாத இரத்தம் கலந்த சிறுநீர். (15) கண் அழற்சி மற்றும் கண் கட்டியுடன் சிவந்த கண்.

மேற்கூறிய 15 நிலைகளில், இப்படி ஏதாவது ஒரு நிலையில் காசநோய் கண்டறியப்பட்டவுடன்தான் பெற்றோர்களாகிய நமது கடமை இரட்டிப்பாகிறது.

காசநோய் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு முறையான சிகிச்சை கொடுப்பதுதான் மிகவும் முக்கியம். நமது நாட்டில் காசநோய் சிகிச்சை என்பது மிகவும் எளிதானது. மலிவானது, எங்கும் இலவசமாகக் கிடைப்பது. சிகிச்சை சம்பந்தமாக நாம் அறிய வேண்டிய நெறிமுறைகள் யாவை?

காசநோய் குடும்பத்தில் ஒரு குழந்தைக்கு ஏற்பட்டால் குடும்பத்தில் உள்ள பெரியவர்களும், இதர குழந்தைகளும்-காசநோய் பாதிக்கப்படாமல் இருக்கிறார்களா எனப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

அப்படி உங்கள் குடும்பத்தில் யாருக்கும் காசநோய் இல்லாவிட்டால் அக்கம்பக்கத்தில் உள்ள யாருக்காவது குறிப்பாக வயதானவர்களுக்கு ஆஸ்துமா, தீராத இருமல் போன்ற வியாதிகள் உள்ளனவா அல்லது அவர்கள் காசநோய்க்கு ஏற்கெனவே சிகிச்சை பெற்றுவருகிறார்களா என்று அறிய வேண்டும்.

காசநோய் ஒரு குழந்தையிடமிருந்து இன்னொரு குழந்தைக்குப் பரவுவது இல்லை. காசநோய், முற்றிய பெரியவர்களிடமிருந்துதான் குழந்தைகளுக்குப் பரவுகிறது.

உங்கள் வீட்டிலோ அல்லது அக்கம்பக்கத்தில் உள்ள வீட்டிலே யாருக்காவது சளியுடன் கூடிய இருமல் இருந்தால் அவர்கள் அதிகமாக வெளிப்படும் சளியை ஒரு டப்பாவில் பிடித்து அதனை எரித்துவிடவோ அல்லது புதைத்துவிடவோ வேண்டும்.

யாரேனும் ஒருவர் நமது குடும்பத்திலோ அல்லது அக்கம் பக்கத்திலோ இரத்தம் கலந்த சளியுடன் இருமித் துப்பினால் உடனடியாக அவருக்குக் காசநோய் இருக்கிறதா என்று பரிசோதனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மார்பு சம்பந்தப்பட்ட காசநோயால் குழந்தைகள் பாதிக்கப்பட்டால் குறைந்தது 1½ ஆண்டு தொடர்ந்து தவறாது சிகிச்சை செய்தல் வேண்டும்.

ஊசி போட வேண்டிய அவசியம் இருந்தால் முதல் 30 ஊசி தினசரி போட்டு, மீதி 15 ஊசிகள் வாரம் இருமுறை போடவேண்டும்.

மூளை சம்பந்தப்பட்ட 'டிபி' நோய் இருந்தால் குறைந்தது 6 மாதங்கள் ஊசி போடவேண்டும். அதைத் தொடர்ந்து மாத்திரைகள் குறைந்தபட்சம் 3 அல்லது 5 வருடங்கள் வரை கொடுக்க வேண்டும்.

எலும்பு சம்பந்தப்பட்ட 'டிபி' நோய் இருந்தால் முதல் மூன்று மாதங்கட்கு ஊசியும், அதைத் தொடர்ந்து, குறைந்தது 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு வரை மாத்திரைகளும் முறையாகக் கொடுத்து வரவேண்டும்.

# குழந்தைகளுக்கு வரும் நோய்களில்....



# தமிழரசு

தமிழ் நாடு அரசின் திங்களிருமுறை ஏடு



அமெரிக்க அய்க்கிய நாட்டின் வெளி உறவுத்துறை (தெற்கு ஆசிய-அண்மைக் கிழக்கு நாடுகள்) துணை அமைச்சர் திரு. ஜேக் மிக்லாஸ் அவர்களுடன் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் உரையாடுதல்.

## 1979 நாட்காட்டி

### ஜனவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### பிப்ரவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | × | × | × |

### மார்ச்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### ஏப்ரல்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | × | × | × | × | × |

### மே

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | × | × |

### ஜூன்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | × | × | × | × | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### ஜூலை

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | × | × | × | × |

### ஆகஸ்ட்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | × |

### செப்டம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | × | × | × | × | × | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### அக்டோபர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | × | × | × |

### நவம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | × |

### டிசம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | × | × | × | × | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |



# குழந்தைகள் பராமரிப்பு



**1979**-ஆம் ஆண்டு அனைத்து நாட்டுக் குழந்தைதைகள் ஆண்டாகும். அதையொட்டி

*(1)* முதலமைச்சர் சிறப்பு நிதியில், குழந்தைகள் நலனுக்காக ஒரு பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்படும். அனாதைக் குழந்தைகளுக்கு அதிகக் கண்காணிப்பும் கவனமும் செலுத்தப்படும்.

*(2)* குழந்தைகள் நிதிக்காகத் திரையரங்குகள் ஒருநாள் வசூலைக் கொடுக்கச் செய்வது.

*(3)* உடல் ஊனமுற்றக் குழந்தைகளுக்கு, செயற்கை ஊன்றுகால்கள் மற்றும் காதுகேட்கும் கருவிகள் விரைவில் வழங்குவது

*(4)* பள்ளி செல்லும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்குதல்.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைமுன்னிட்டு, முதலமைச்சர் இசைவளித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உடல் ஊனமுற்ற குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு நம்பத்தக்க விண்ணப்பப்பாரங்கள் வரவழைக்க செய்தி மற்றும், கிராமப்புற உள்ளூர் அலுவலகங்களின் மூலமாக விரிவாக விளம்பரம் செய்யப்படும். அவ்விண்ணப்ப பாரங்களைப் பதிவு செய்து, ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் *3,000* செயற்கை ஊன்று கால்கள், *1,000* செயற்கை உறுப்புகள், *1,000* காது கேட்கும் கருவிகள் வழங்கத் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.



மேல்பாக்கத்தில் இருக்கும் பிச்சைக்காரர் இல்லம் மேலும் விரிவுபடுத்தப்படும். ஒன்றிரண்டைத்தவிர உள்ளாட்சி நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் மற்றப் பிச்சைக்காரர் இல்லங்கள் மூடிவிடப்படும்.

பிச்சைக்காரர்களுக்கென ஒரு தனிக் காவல் பிரிவு ஏற்படுத்துவதைப்பற்றி இத்துறை ஆலோசித்து வருகின்றது. தற்போதுள்ள ஏற்பாடுகள் உகந்ததாக இல்லை. இது இம்மாநிலத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தீண்டாமை ஒழிப்பு தனிப்பிரிவு போல் உள்ளதாக இருக்கும்.

தாழ்த்தப்பட்ட வகுப்புக் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும், அச்சலுகைகள் மறுமணம் செய்து கொண்ட விதவைகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படும்.



[இத்தகவல்களை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.]



---

மூளை மற்றும் எலும்பு சம்பந்தப்பட்ட 'டிபி' நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருந்து, மாத்திரை, ஊசி முதலியவற்றோடு 'பிசியோ தெரபி' எனப்படும் சதை வலிவுப்பயிற்சிச் சிகிச்சையும் தொடர்ந்து கொடுத்து வர வேண்டும்!

எனவே, காசநோய் என்பது இந்த இருபதாம் நூற்றாண்டில், தீர்க்க முடியாத ஒரு கொடிய நோய் அல்ல. நோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்தும், நோய் முற்றியவர்களைத் தக்க பாதுகாப்பு முறைகளோடு தனிப்படுத்தியும், அப்படியே நோய் வந்து விட்டாலும் தொடர் சிகிச்சை மூலம் நாம் நோயை அறவே போக்கிவிடலாம். நமது மாநிலத்தில் மட்டும் அல்ல, இந்தியாவின் எந்த ஒரு மருத்துவமனையிலும் காசநோய் சிகிச்சை இலவசமாகக் கிடைக்கும்.

பெரிய அம்மை நோயை ஒழித்து விட்டோம் என்று உலகில் பிறநாடுகளுடன் நாமும் பெருமிதப்படும் நிலையில் இன்று இருக்கின்றோம். அதேபோல் பிஞ்சுக் குழந்தைகளுக்கு நஞ்சாக அமைகின்ற காசநோய் என்னும் கொடிய அரக்கனிடமிருந்து குழந்தையை மீட்டு, காசநோயை நாம் அறவே ஒழித்து விட்டோம் என்று பெருமைப்படுகிற நாள் வெகுவிரைவில் வர வேண்டும்.

—டாக்டர் ஆர். நர்மதா

—டாக்டர் ஏ. பார்த்தசாரதி



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# அமராவதி நகர் படைத்துறைப் பள்ளி

புலவர் ம.நா. சந்தான கிருஷ்ணன்

இராணுவப் பள்ளி என்றும், படைத்துறைப் பள்ளி என்றும் கூறப்பெறும் சைனிக் பள்ளிகள் நம் இந்திய நாட்டில் பதினெட்டு இடங்களில் உள்ளன. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டில் அமைந்துள்ளது.

கோயமுத்தூரிலிருந்து 88 கிலோ மீட்டர் தொலைவிலும் உடுமலைப்பேட்டையிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள அமராவதி நகர் என்னுமிடத்தில் இப்பள்ளி உள்ளது. நாற்புறம் மலைகள் சூழ்ந்துள்ள அழகான இயற்கை அமைப்பில், அமராவதி அணைக்கு அருகில் அமைந்துள்ள இந்த சைனிக் பள்ளி எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்குகின்றது. இயற்கை அமைப்பும் இனிய சூழலும் பெற்றுள்ள இந்தப்பள்ளி 18-7-1962ல் தொடங்கப்பட்டது.

மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் நடைபெற்றுவரும் இப்பள்ளி, மாணவர்களை அறிவு, ஆற்றல், ஒழுக்கம், ஒற்றுமை, நாட்டுப்பற்றுணர்வு ஆகியவற்றில் சிறப்புறச் செய்து அவர்களைத் தேசியப் பாதுகாப்புக் கழகத்திற்கு (National Defence Academy) அனுப்புகின்றது.

இப்பள்ளியில் கல்வி கற்று, தேசியப் பாதுகாப்புக் கழகத்தில் சேர்ந்து, இதுவரை 112 மாணவர்கள், இராணுவத்துறையில் தரைப்படை, கடற்படை, விமானப்படைகளில் நாட்டில் பல இடங்களிலும் அதிகாரிகளாகவும், உயர் அதிகாரிகளாகவும் சிறப்புடன் பணியாற்றுகின்றனர். மற்றும் பலர் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல் ஆகிய துறைகளில் பட்டங்கள் பல பெற்று, பல துறைகளிலும் சிறப்புடன் விளங்குகின்றனர்.

இப்பள்ளி பொதுப்பள்ளிக் கல்வி (Public School Education) முறையில், மத்திய உயர் கல்விக் கழகத்துடன் (Central Board of Secondary Education) இணைந்து, அக்கழகம் வரையறுக்கும் 10+2 முறை பாடத்திட்டத்தைப் பயிற்றுவிக்கின்றது. அக்கழகம் நடத்தும் தேர்வுகளிலும் இப்பள்ளி மாணவர்கள் நிறைந்த மதிப்பெண்கள் பெற்று, சிறந்த இடத்தைப் பெறுகின்றனர். 1977-ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு (Higher Secondary Course) பதினோராம் வகுப்பு மாணவர்கள் 68 பேர் எழுதி 66 பேர் தேர்ச்சி பெற்றனர். அதே ஆண்டில் புதியமுறை பத்தாம் வகுப்பு மாணவர்கள் உயர்பள்ளித் தேர்வை (S.S.C.) 77 பேர் எழுதினர். அவர்களில் ஒருவர் தவிர அனைவரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். வரும் 1979 மார்ச்-ஏப்ரலில் நடைபெற இருக்கும் தேர்வுகளில் இப்பள்ளியில் இருந்து, புதிய முறை பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களும், பத்தாம் வகுப்பு மாணவர்களும் முறையே மேல்நிலைப் பள்ளித் தேர்வு (S.S.C.) உயர்நிலைப் பள்ளித் தேர்வு (H.S.C.) ஆகியவற்றை எழுத உள்ளனர்.

பயிற்று மொழி ஆங்கிலமே ஆயினும் ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மும்மொழிகளையும் மாணவர்கள் பயில்கின்றனர். ஓவியம், கைத்தொழில் (Arts & Crafts) ஆகியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. 10 + 2 என்ற கல்விமுறையில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளி ( Residential School ) தங்கிப் பயிலும் பள்ளி ஆகும்.

இப் பள்ளி மாணவர்கள் தங்குவதற்கென வசதி மிக்க, அழகான இல்லங்கள் பத்து உள்ளன. சேரர் இல்லம், சோழர் இல்லம், பாண்டியர் இல்லம், பல்லவர் இல்லம், வள்ளுவர் இல்லம், பாரதி இல்லம் எனப் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. வானொலிச்





செய்திகளையும், பிற சிறப்பு நிகழ்ச்சிகளையும் மாணவர்கள் கேட்டுப் பயன்பெறுவதற்கேற்ப வானொலி வசதியும் உள்ளது.

ஒரே சமயத்தில் அனைத்து மாணவர்களும் உண்ணுவதற்கேற்ற வசதிகளுடன் கூடிய உணவுக்கூடம் ஒன்று உள்ளது. இந்திய உணவு ஆராய்ச்சிக் கழகம் வரையறை செய்துள்ளபடி மாணவர்களுக்குச் சரிவிகிதச் சத்து உணவு அளிக்கப்படுகின்றது.

அதிகாலை 5.30 மணிக்குப் படுக்கையைவிட்டு எழும் மாணவர்கள் இரவு 10.30 மணிக்குப் படுக்கைக்கு உறங்கச் செல்வர். மாணவர்களுள் இளையோர் பிரிவினர் ( Junior ) இரவு 9.30 மணிக்கே உறங்கச் செல்ல வேண்டும். மாணவர்களுள் முதியோர் பிரிவினர் இரவு 10.30 மணிக்குப் படுக்கைக்குச் செல்லுதல் வேண்டும். காலை முதல் இரவுவரை அவர்கள் பள்ளியில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி அனைத்து அலுவல்களையும் கவனிப்பர். எதிர்காலத்தில் வாழ்வில் வெற்றிக் கனி குவிக்கும் வீரர்களாக இளஞ்சிறார்களை மாற்றியமைக்கும் புனிதத் திருப்பணியில் இப்பள்ளி ஈடுபட்டுள்ளது.

மாணவர்கள் தம் நடிப்புத் திறனையும், பேச்சுத் திறனையும் இசைத்திறனையும் மற்றுமுள்ள கலை, அறிவியல் திறன்களையும் வளர்த்துக் கொள்ள ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் தனித்தனியே நாடகமன்றம், இசைக்கழகம், இலக்கியக்கழகம் ஆகியவையும், ஓவியக்கழகம், கைத்தொழில் கழகம், கணித இயற்கழகம், பௌதிகக் கழகம், இரசாயனக் கழகம், நிழற்படக் கழகம், அஞ்சல் தலை சேமிப்புக் கழகம், பாறை ஏறும் கழகம், படகு ஓட்டும் கழகம், மலை ஏறக் கழகம், தோட்ட இயல் கழகம், முரசுக்கழகம் ஆகியவையும் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO CLUB) அடிக்கடி பல இடங்களுக்கும் சென்று பொதுமக்கள் மற்றும் மலைவாழ்



மக்களைக் கண்டு உரையாடி அவர்கட்குப் பலவகைகளில் உதவிசெய்து வருகின்றது. மாணவர்களின் திறமைகள் பயன்படவும் வளர்ச்சியடையும் இக்கழகங்கள் உதவுகின்றன.

இப்பள்ளி மாணவர்கள் பிற இடங்களுக்குச் சென்று பல்வகை விளையாட்டுப் போட்டிகள், நீச்சல் போட்டி, ஓவியப் போட்டி நாடக நடிப்புப் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலியவற்றில் பரிசுகள் பலவற்றையும் பெற்று, பள்ளிக்குப் பெருமை தேடித் தருகின்றனர். அரசு நடத்தும் விழாக்களிலும் பங்கேற்கும் சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது இப்பள்ளி மாணவர்களைக் கொண்ட முரசுக்குழு (Band Party).

இராணுவப் பள்ளி என்பதற்கேற்ப மாணவர்கள் அனைவரும் ''காக்கிச் சீருடை'' அணிந்துதான் பள்ளிக்குச் செல்வர். சேர்ந்த ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்புவரை தேசிய மாணவர் படைப்பயிற்சி கட்டாயமாக அளிக்கப்படுகிறது. இந்தியத் தலைநகர் டெல்லி, தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை ஆகிய இடங்களில் நடைபெறும் விடுதலை நாள் விழாவிலும், குடியரசு நாள் விழாவிலும் ஆண்டுதோறும் இப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு தேசிய மாணவர் படை அணிவகுப்பில் பங்கு கொண்டு சிறப்பிடம் பெறுகின்றனர். துப்பாக்கியால் சுடும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. வெளியிடங்களில் சென்று ஆண்டுப்பயிற்சி முகாம்களில் (Annual Training Camp) பங்கு கொண்டு சிறப்புப் பெறுகின்றனர்.

ஆண்டுக்கு ஒருமுறை மாணவர்கள் அனைவரும் பல குழுக்களாகப் பிரிந்து ஊட்டி, கொடைக்கானல், தேக்கடி, டாப்சிலிப், குற்றாலம், கொச்சி, சேலம், மதுரை, ஏர்க்காடு, பூனா முதலிய இடங்களுக்கு மலைப்பயணமாகவும் (HIKE) சுற்றுலாவாகவும் ( Excursions ) சென்று வருகின்றனர். இதனால் இயற்கை அழகினைக் கண்டு களிக்கும் வாய்ப்பு அமைகிறது. வரலாற்றுச் சிறப்பமைந்த இடங்களைப் பார்ப்பானால் வரலாற்றறிவும் வளர்கிறது. தொழிற்சாலைகள், ஆய்வுக் கூடங்கள் முதலியவற்றைக்கொண்டு அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்கின்றனர். உடலும் உள்ளமும் உரம் பெறுகின்றன. அவ்வாறு மலைப் பயணமாகவும், சுற்றுலாவாகவும் சென்று தங்கும் இடங்



களில் கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்திக் களிப்புறுகின்றனர். இவையேயன்றி இடையிடையே வார இறுதியில் அருகில் சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள சின்னாறு தூவானம், பாம்பாறு முதலிய இடங்களுக்குச் சென்று தங்கி வருதலும் உண்டு.

மருத்துவ வசதிகளும் மாணவர்கட்குச் செய்து தரப்பட்டுள்ளன. உடல்நலம் குறைந்தோர் சிகிச்சை பெறும்பொழுது தங்குவதற்கெனத் தனி இடம் உள்ளது. மருத்துவ உதவியாளரும் பகுதி நேர மருத்துவரும் இருந்து மாணவர்களை நன்கு கவனித்து வருகின்றனர்.

மாணவர்கள் இருந்து படிக்கவும், எடுத்துச் செல்லவும் புத்தகங்களை வழங்கும் சிறந்ததொரு நூல்நிலையம் உள்ளது. இங்கு தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் அமைந்த இலக்கியம் வரலாறு, அறிவியல், மொழி





யியல் முதலிய நூல்களும், ஆய்வு நூல்களுமாக 12,000 நூல்கள் உள்ளன. திங்களிதழ் வார இதழ், நாளிதழ் ஆகிய இதழ்களும் மேற்கூறப்பட்ட மொழிகளில் வந்துகொண்டு இருக்கின்றன.

இரசாயனம் ( Chemistry ), பௌதிகம் ( Physics ), உயிரியல் (Biology) முதலிய அறிவியல் பரிசோதனைக்கூடங்கள் (Labs) மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளமை, மாணவர்களின் விஞ்ஞான அறிவு வளர சிறக்க பெருந்துணை புரிகின்றது.

இப்பள்ளியில் சேர்ந்து பயிலும் மாணவர்கட்கு, தமிழ்நாடு அரசு சாதிசமய இனப்பாகுபாடின்றி மாணவனின் பெற்றோரின் வருவாய் அடிப்படையில் பெரும் அளவில் உதவித்தொகை அளித்து வருகின்றது. தாய், தந்தையின் மொத்த வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 வரை அமையு

மாயின், அம்மாணவனுக்கு ரூ. 3,000 உதவித்தொகையாகக் கிடைக்கும். துணிமணி முதலிய செலவுகளுக்கு மேற்கூறிய தொகைக்கு மேல், முதலாண்டு மாணவனாயின் ரூ. 300-ம், ஏனைய மாணவர்கட்கு ரூ.150ம் ஆக, ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றது. மேற்கூறிய வகையில் பெற்றோரின் மாத வருமானம் ரூ. 600 வரை அமைந்தால் ரூ. 2250-ம் துணிமணிச் செலவு

களுக்கு மேற்கண்ட முறையில் ரூ. 300 முதலாண்டிலும், ஏனைய ஆண்டுகளில் ரூ. 150-ம், மாத வருமானம் ரூ. 800 வரை அமைந்தால் ரூ. 1500-ம் மாத வருமானம் ரூ. 1000 வரை அமைந்தால் ரூ. 750-ல் ஒவ்வொர் ஆண்டிற்கும் உதவித்தொகையாக அளிக்கப்படுகின்றது.

சைனிக் பள்ளியில் சேருவதற்குரிய அனைந்திந்திய நுழைவுத் தேர்வில் முதலிடம் பெறும் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவனுக்குத் தமிழ்நாடு அரசு, வருமான வேறுபாடு கருதாது, முழுமையான உதவித்தொகை அளித்து ஊக்குவிக்கின்றது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தோருக்கும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தோருக்கும் பலவகை சலுகைகள் உண்டு.

சைனிக் பள்ளிகளில் சேர விரும்பும் மாணவர்கட்கு என்று அனைந்திந்திய நுழைவுத்தேர்வு (All India Entrance Examination) நடத்தப்படுகின்றது. இத்தேர்வு முடிவில் அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் 6-ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். சேர இருக்கும் ஆண்டின் ஜூலை மாதம் முதல் தேதியன்று 10 வயது முடிவடைந்து ஆனால் 12 வயது முடியவடையாமல் இருக்கும் மாணவர்கள், பிப்ரவரித் திங்களில் பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்றாவது சனி, ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் அனைத்திந்திய நுழைவுத் தேர்வு எழுதிச் சிறப்புடன் தேர்ச்சி பெறுதல் வேண்டும். ஒருவர் ஒருமுறைதான் இத்தேர்வு எழுதலாம்.

கணிதம், மொழியறிவு, நுண்ணறிவுச் சோதனை ஆகியவற்றில் நடத்தப்பெறும் இத்தேர்வுகளைத் தமிழ், இந்தி, ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு மலையா



# திரு ஆரூரான் சர்க்கரை ஆலை

வடபாதிமங்கலம் — தஞ்சாவூர் மாவட்டம்

## விவசாயிகளுக்கு ஓர் நற் செய்தி!

கரும்பு நடவு செய்து ஆலையினரால் கொடுக்கப்படும்
கணிசமான மான்யத் தொகைகளைப் பெறுங்கள்.

1. முன்பட்ட நடவு மான்யம் :

(அ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்குட்பட்ட தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு — ரூ. 250 (ஏக்கருக்கு)

பிப்ரவரி 79 நடவிற்கு — ரூ. 200 (ஏக்கருக்கு)

(ஆ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் உள்ள தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு — ரூ. 200 (ஏக்கருக்கு)

பிப்ரவரி 79 நடவிற்கு — ரூ. 150 (ஏக்கருக்கு)

2. புதுரக கரும்பு நடவு மான்யம் :

ஏப்ரல் 79, மே 79, ஜூன் 79 மாதங்களில்
கோ 671 நடவிற்கு — ரூ. 300 (ஏக்கருக்கு)

3. 'டிரான்ஸ்போர்ட்' மான்யம் :

ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு மேல் உண்டாகும் லாரி வாடகையை ஆலையினர் ஏற்றுக் கொள்வார்கள்.

4. மான்யத் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள் :

(அ) ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்ச மகசூல் 27 டன்கள் இருக்க வேண்டும்.

(ஆ) கம்பெனி வெட்டு உத்திரவுப்படி காலத்தில் கரும்பு வெட்டி சப்ளை செய்ய வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு எங்கள் கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாக மேலாளர்,
திரு ஆரூரான் சர்க்கரை ஆலை,
வடபாதிமங்கலம்.

ANNA PUB/2811/8/AS/11178/G.

ளம் ஆகிய மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் எழுதலாம்.

அனைந்திந்திய நுழைவுத் தேர்வு தமிழ்நாட்டில் அமராவதி நகர், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், கடலூர் (புதுநகர்) தஞ்சாவூர், வேலூர் (வ. ஆ. மாவட்டம்) ஆகிய ஊர்களில் நடத்தப்பெறும். இத்தேர்வு எழுதி, தகுதி பெற்ற மாணவர்களுக்கு நேர் முகத் தேர்வும் மருத்துவ ஆய்வும் கோவை, கடலூர், திருச்சி ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்பெறும். இவ்வாண்டு நுழைவுத் தேர்வு (எழுத்துத் தேர்வு) மேற்கூறிய இடங்களில் பிப்ரவரி மாதம் 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

துடிதுடிப்பும், அறிவுக் கூர்மையும், நல்ல உடலமைப்பும், படைத்துறை ஆர்வமும் நிறைந்த இளஞ் சிறுவர்களுக்கென்றே அமைந்துள்ள அமராவதிநகர் படைத்துறைப்பள்ளி முப்படைகளில் பெரும் அளவில் சேர்வதற்கென்றே தமிழ்நாடு, பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களை-மாணவர்களை ஆயத்தம் செய்து அனுப்பி வைக்கின்றது.

எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் இப்பள்ளியைப் பற்றி மேற்கொண்டு விவரம் அறிய விரும்புவோரும் சேர விரும்பும் சிறுவர்களும், மாணவர்களைச் சேர்க்க இருக்கும் பெற்றோர்



களும் பள்ளிமுதல்வருக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.



நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பமும், தகவல் தொகுப்பும் மாதிரி வினாத்தாள்களும் வேண்டுவோர், அமராவதிநகர் அஞ்சலகத்தில் பெறுமாறு ரூ. 3-க்கு குறுக்குக்கோடிட்ட அஞ்சல் ஆணையும் (Crossed Postal Order) 50 காசு அஞ்சல்தலை ஒட்டப்பட்ட தன் முகவரியுடன் கூடிய உறை ஒன்றும் "முதல்வர் சைனிக் பள்ளி, அமராவதிநகர், கோவை மாவட்டம் 642102" என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளிக்குச் சேர வேண்டிய இறுதிநாள் 31-1-1979.

---

விளையும் பயிர்

# பெயர் தெரியாத கவிஞர்!

அது ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடம். அங்கே படித்துக்கொண்டிருந்தான், ஒரு மாணவன். அவனுக்குத் தமிழிலே ஆர்வம் அதி அதிகம். பாட்டு இயற்றவும் தெரியும். ஆனாலும், தனக்குப் பாட்டு எழுதத் தெரியும் என்பதை அவன் வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

ஒருநாள், அந்த மாணவன் மனத்திலே ஒரு பாட்டுத் தோன்றியது. அதை ஒரு காகிதத்தில் எழுதினான்; படித்துப் பார்த்தான். படிக்கப் படிக்க அது மிகவும் நன்றாக அமைந்திருப்பதுபோல் தோன்றியது அவனுக்கு.

'இந்தப் பாட்டை நாம் யாரிடமாவது காட்ட வேண்டும். அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிய வேண்டும்' என்று நினைத்தான்.

ஆனால், பிறரிடத்தில் காட்டுவதற்கு அவனுக்குக் கூச்சம். காட்டாமல் இருக்கவும் மனமில்லை. யோசித்தான். கடைசியில், ஒரு முடிவுக்கு வந்தான்.

அதன்படி, மறுநாள் வெகு சீக்கிரமாக-அதாவது எல்லோருக்கும் முன்பாகப் பள்ளிக்குச் சென்றான்; தான் இயற்றிய பாட்டை ஒரு காகிதத்தில் எழுதினான், உபாத்தியாயர் உட்காரும் இடத்திற்கு அருகில் வைத்து விட்டுத் தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரம் சென்று மற்றொரு மாணவன் அங்கு வந்தான். அவன் தரையில் ஏதோ காகிதத்தில் எழுதிக் கிடப்பதைக் கண்டான். உடனே அதை எடுத்தான்; படித்தான்; பிறகு, தமிழாசிரியரிடம் அதைக் கொண்டு போய்க் கொடுத்தான்.

தமிழாசிரியர் பாட்டை வாசித்துப் பார்த்தார். "அடடா! இந்தப் பாடல் எவ்வளவு அழகாயிருக்கிறது! இதை இயற்றிய கவிஞர் யார்? பெயர் போடவில்லையே!" என்று சொல்லிவிட்டுத் திரும்பத் திரும்ப அதைப் பாடி மகிழ்ந்தார்; மாணவர்களுக்கும் அதைப் பாடிக்காட்டினார்; பாட்டில் உள்ள சொல் அழகையும், பொருள் அழகையும் எடுத்துக் கூறினார்.

மாணவர்கள் யாவரும் அந்தப் பாடலின் பெருமையை உணர்ந்தனர். 'இதை இயற்றிய கவிஞர் யாராயிருக்கும்?' என்று அவர்களும் யோசித்தனர்!

ஆனால், அதை இயற்றிய கவிஞர் அதே வகுப்பில், அவர்களுக்கு மத்தியிலேயே உட்கார்ந்திருக்கிறார் என்பதை அவர்கள் அப்போது அறியவில்லை.

இப்படி ஒரு காலத்தில் பெயர் தெரியாத கவிஞனாயிருந்த அந்த மாணவன், கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்றால் இப்போது யாருக்குத்தான் தெரியாது!

(குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதிய 'பெரியோர்கள் வாழ்விலே' என்னும் நூலிலிருந்து.)

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்

தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்

கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.

(தொலைபேசி எண். 20367)

*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.

உங்கள் நலனே எங்கள் பணி.

# வெள்ளைத்துணி போர்த்திடினும் விழி கொடுப்பேன்



அந்த ஒருநாளும் வந்துவிடும் இந்த உடல்
சொந்தமெனக்கொண்ட நிலை நீங்கும்போது
துள்ளும் உயிர்ஓட்டம் ஒடுங்கிற்றென்று
சொல்லத் தகுதிபெற்ற மருத்துவரும் கூறியபின்
வெள்ளைத்துணி போர்த்தி விரைத்த உடல்கட்டிலிலே
கொள்ளும் வகையில் படுக்கவைத்துக் கூடிநிற்பார்
மரணப்படுக்கை இது என்று எண்ணாதீர்
மலர்கின்ற வாழ்வுப்படுக்கை என உணர்ந்திடுவீர்!

பிறர்வாழப் பலவாறும் என்உடலை உதவிடுவீர்
கதிரவனின் உதயமே கண்டிடாத கபோதி அதைக்
காண்பதற்கு என்பார்வை வழங்கிடுவீர்
கொஞ்சும் குழந்தையின் குறுமுகத்தை
அஞ்சி நாணமுறும் கன்னியின் காதற்கண்வீச்சை
கண்டுகளித்திட என்கண்கள் அளித்திடுவீர்!

எப்பொழுதும் வேதனையே கொடுத்துவரும்
இரக்கமற்ற மனிதனுக்கு என் இதயம் தந்திடுவீர்
விபத்தில் சிக்குண்டு விடுபட்ட இளைஞனுக்கு
என்இரத்தம் தானம் வழங்கிடுவீர்!

இயந்திரத்தின் உதவியுடன் (வாழ்ந்து வரும்) மனிதனுக்கு
என்னுடைய (நீரக) உறுப்புக்கள் பொருத்திடுவீர்!
இயற்கைவாழ்வு அவன்பெற்று வாழட்டும்
என்னுடைய எலும்பு, தசைநார், நரம்புகள்
என்னுள் ஒவ்வொருஅணுவினையும் எடுத்திடுவீர்!
முடங்கிக் கிடக்கின்ற குழந்தைக்குக் கொடுத்து
தவழ்ந்து தவழ்ந்து அதுநடந்திடவும் வகைசெய்வீர்
ஊமைச் சிறுவன் ஒருபேச்சுப் பேசிடவும்
செவிப்புலன் இழந்திட்ட சிறுமி அவள்
சீறிவிழும் மழையின் குரல்கேட்டு மகிழ்ந்திடவும்

என்னுடலில் மிஞ்சியவை எரித்திடுவீர்!
கிடைத்த சாம்பலினைக் காற்றில் கலந்திடுவீர்!
செடிகொடிகள் மலரட்டும் அதன் விளைவால்
எண்ணில் மிஞ்சியவை எதையேனும் புதைக்கவேண்டுமெனில்
என்குற்றம் குறைகள் எல்லாம் புதையட்டும்
ஆன்மாவை மட்டும் அர்ப்பணிப்பேன் இறைவனுக்கு!

எதற்கேனும் என்னை நினைவுகொள்ள விரும்புவீரேல்
உங்கள் உதவி கோரும் ஒருவருக்கு
அன்புமொழி பேசி ஆதரவு நல்கிடுவீர்!
அதுவே என் நினைவுக்கு அஞ்சலியாம்
நான்கேட்ட அவையாவும் நிறைவேறின்
நானென்றும் நிலைத்திடுவேன் இவ்வுலகில்

[ஆங்கிலக் குறிப்பு ஒன்றைத் தழுவி இயற்றியது]

எம்.எஸ்.கோபால்

# புத்திசாலிக் குழந்தைகள் உருவாகிட...!

-- Sister மாணிக்கம்



குழந்தைகள் எடை கூடி, நன்றாகச் சத்துப்பிடித்து வளர வேண்டுமானால், நல்ல சுறுசுறுப்புள்ள புத்திசாலிக் குழந்தைகளாக உருவாக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு நல்ல ஊட்டச்சத்துள்ள உணவு தரப்படுதல் வேண்டும்.

ஊட்டச்சத்து என்ற உடனேயே ஆப்பிளும், ஆரஞ்சும், ஹார்லிக்சும், ஓவலும் கொடுத்தால் தான் குழந்தை வளரும் என எண்ணக்கூடாது.

செலவு குறைவாகவும், சத்து அதிகமாகவும் உள்ள உணவுவகைகள் குழந்தைகளுக்குத் தரப்பட வேண்டும்.

தாய்ப்பாலை எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைக்கு ஓா வருடம் ஆகும்வரை நிறுத்தக்கூடாது.

குழந்தைக்கு அய்ந்துமாதம் ஆகும்போதே இட்டிலி, சோறு, வேகவைத்த கீரை, உருளைக் கிழங்கு, கேப்பைக்கூழ் முதலியவற்றைச் சிறிது சிறிதாக ஊட்டிப் பழக்கவேண்டும்.

வேகவைத்த கீரைகள், காய்கறிகள் முதலியன மாலைக்கண் நோய் வராமலும், வாயின் ஓரங்களில் புண் ஏற்படாமலும் தடுக்க உதவுகின்றன.

வருமானம் குறைவாக உள்ளவர்களும்கூட விலைக்குறைவாக உள்ள கேப்பை, கம்பு, கீரை, நிலக்கடலை, பொட்டுக்கடலை, வாழைப்பழம் முதலியவற்றை உணவாகச் சாப்பிடுவதன் மூலம் ஊட்டச்சத்து குறைவால் ஏற்படும் நோய்கள் வராமல் தடுத்துக்கொள்ளலாம்.

சிறிது வருமானம் அதிகமுள்ளவர்கள் மற்றும் நடுத்தரவர்க்கத்தினர் வாரத்தில் ஒரு நாளோ, இரண்டு நாட்களோ கறி, மீன், முட்டை முதலியவற்றை வீட்டில் சமைக்கும்போது உங்கள் குழந்தைக்கு 10 மாதம் ஆகியிருந்தால் அவர்களுக்கும் கொடுக்கலாம்.



# குழந்தைகள் எப்படி வளர்கின்றன?

பிறப்பு முதல் 3 மாதம் வரை

—பெரும்பகுதி தூங்குகிறது.

—அசையும் பொருளைக் கண்கள் பின்தொடர்கின்றன; முகத்தைப் பார்த்துச் சிரிக்கின்றது.

—ஒலியைக் கேட்கிறது.

—அன்னையை (பார்வையால், குறிப்டாக முகர்வாலும் செவிப்பலத்தாலும், ஒருவேளை விளக்க இயலாத புலன் உணர்வாலும்) அடையாளம் காண்கிறது.

—கையிலுள்ள பொருளைத் தன்னையும் அறியாமல் பிடித்துக் கொள்கிறது.

—தானாகவும், பதிலுக்கும் கலகல வென்று சிரிக்கிறது.

—சுற்றியுள்ளோரிடம் தொடர்பு கொள்கிறது; அன்னையின் உளநிலைக்கேற்ப அமைதியாக, மனவெழுச்சியுடன் காணப்படுகிறது.

# குழந்தையின் வாழ்விலே !



குழந்தை பிறப்பின்போது எடை சுமார் 3 கிலோ. நான்கைய்ந்து மாதங்களில் எடை, பிறப்பு எடையைப்போல் இருமடங்கும், ஒருஆண்டு நிறையும்போது பிறப்பு எடையைப் போல் 3 மடங்காகவும் அதிகரிக்கிறது. குழந்தை—

இரண்டாவது மாதத்தில் தாயைப் பார்த்துச் சிரிக்கிறது.

❋ நான்காவது மாதத்தில் மழலைப்பேச்சு ஆரம்பம். காணும் பொருட்களை அடைய கைகளை நீட்டுகிறது.

❋ ஆறாவது மாதத்தில் ஆதாரத்துடன் உட்காருகிறது.

❋ எட்டாவது மாதத்தில் ஆதாரமின்றி உட்காருகிறது. விளையாட்டுப் பொருட்களைக் கையால் எடுக்கிறது.

❋ பத்தாவது மாதத்தில் இடத்திற்கு இடம் தவழ்ந்து செல்கிறது.

❋ பன்னிரண்டாவது மாதத்தில் நிற்கவும், துணையுடன் நடக்கவும் ஆரம்பிக்கிறது. ஒரு சில வார்த்தைகளைக் கற்றுக் கொள்கிறது.

முதல் மாதத்திலிருந்தே உங்கள் குழந்தையைச் சாதாரணத் தண்ணீரில் குளிப்பாட்டுங்கள். சோப்பு அல்லது பாசிப்பயறு அரைத்துக் குளிப்பாட்டலாம். சுடுநீரில் குளிப்பாட்டுதலும், தினமும் தலைக்கு ஊற்றுவதும், எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவதும் குழந்தைக்குப் பல நோய்களை உண்டு பண்ணுகின்றன.

டாக்டர் ஏ. மேகநாதன்,
நிலைய மருத்துவ அலுவலர்,
குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

### 3 மாதம் முதல் 6 மாதம் வரை

—அண்மையிலுள்ள பொருளை எடுக்கிறது; கொடுக்கப்படும் பொருளை வாங்கக் கையை நீட்டுகிறது.

—பொருளை வாயினருகில் கொண்டு போகின்றது.

—வாய்விட்டுச் சிரிக்கின்றது; வயது வந்தோர் விளையாடினால் அதைப் பார்த்துக் கத்திச் சிரிக்கிறது.

—காணாமற்போன விளையாட்டுப் பொருளைத் தேடுகிறது.

—பொருள்களைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் பிடிக்காமல், உள்ளங்கைக்கும் கடைசி 4 விரல்களுக்கும் இடையில் பிடிக்கிறது.

### 6 மாதம் முதல் 9 மாதம் வரை

—பொருளை அல்லது ஆளை நோக்கி நகர்கின்றது.

—நிறுத்திப் பிடித்தால் நிற்க முடிகின்றது

—சிறிய பொருள்களைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் பிடிக்கின்றது.

—பொருள்களை வீசி மகிழ்கின்றது.

—சொற்பொருளின்றி பல்வேறு ஒலிகளை எழுப்புகின்றது.

—குடும்பத்தினரின் முகங்களை அறிவதுடன், அந்நியரின் முகங் கண்டு அஞ்சுகிறது.



# குழந்தை வளர்ப்பில் காணப்படும் குறைபாடுகள்!

மொழிவழியாகவும், இனவழியாகவும் பரந்துகிடக்கும் நம் இந்திய நாட்டில், மதச்சடங்குகளினாலும் மற்ற மூட நம்பிக்கைகளினாலும், வளரும் குழந்தைகளுக்கு ஊறு விளைவிக்கும் பல பழக்கங்கள் நிலவி வருகின்றன.

சிறு குழந்தைகளுக்கு காபி, டீ முதலியன கொடுத்தலும், வயிற்றில் கட்டிக் கொள்ளுமே என்று பாலில் அளவுக்கு அதிகமாகத் தண்ணீர் கலந்து தருதலும் மிகவும் தவறான பழக்கங்களாகும்.

குழந்தைக்கு விளக்கெண்ணெய் அல்லது வேப்பெண்ணெய் கொடுத்தலும், வலிப்பு வந்தால் சூடுபோடுதலும், வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் தொக்கம் (ஒரம்) எடுத்தலும், சீரடித்தலும், அழுக்கடைந்த பாட்டில்களில் பால் கொடுத்தலும் குழந்தையின் உயிருக்கே அபாயம் விளைவிக்கும் ஆபத்தான பழக்கங்களாகும்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஒருவருடம்வரை கொடுத்து வருதல் மிக நல்ல பழக்கமாயினும், நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குமேல் தாய்ப்பால் மட்டும் போதாது. ஆகையால் திட உணவைக் கொடுக்கத் தொடங்காமல் கடைசி வரை தாய்ப்பால் மட்டுமே கொடுத்து வருவது மற்றொரு தவறான நம்பிக்கை.

அசைவ உணவு உண்ணும் குடும்பங்களில் கூட குழந்தைகளுக்கு 2 வயது முடியும் வரை முட்டை, மீன், இறைச்சி முதலியன தராமலிருப்பது மற்றொரு மூட நம்பிக்கையாகும்.

இத்தகைய தவறான பழக்கங்களுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் இடங்கொடுப்பதால் குழந்தைகளின் உடல்வளர்ச்சி, மனவளர்ச்சி முதலியன பாதிக்கப்பட்டு நோய்க்கு இடந்தருவதோடு சமயத்தில் குழந்தையின் உயிருக்கே அபாயம் நேரிடலாம்.

—டாக்டர் ஏ. பிரேமா.

---

**9 முதல் 12 மாதம் வரை**

—உதவியின்றி எழுந்து நிற்கின்றது; இரு கைகளால் பிடித்தால், நடக்கின்றது.

—கேட்ட ஒலியைத் திரும்ப ஒலிக்கின்றது.

—2 அல்லது 3 சொற்களை உச்சரிக்கின்றது.

—உலகை ஆராய்வதில் அதிக அக்கறை காட்டுகிறது.

—உச்சரித்த ஒலிகளையும், பிறர் பொருள்பட உச்சரிக்கும் ஒலிகளையும் திரும்ப உச்சரிக்கின்றது.

**12 முதல் 18 மாதம் வரை**

—தானே நடந்து, வீட்டையும் சுற்றுப்புறத்தையும் ஆராய்கின்றது.

—5 முதல் 10 சொற்கள் வரை உச்சரிக்கின்றது.

—அண்ணன், அக்காவுடன் விளையாடும் போது (கண்ணீர் அல்லது கோபச் சைகைகள் மூலம்) பொறாமையையும், போட்டியையும் காட்டுகிறது—இந்தப் போட்டி, வன்முறை அடையாளங்கள் அதன் கூட்டு வாழ்க்கை நிலைகளைக் காட்டுகின்றன.

**18 முதல் 24 மாதம் வரை**

—முதலில் கையைப் பிடித்தும், பிறகு தானாகவும் படிகளில் ஏறி இறங்குகிறது.

—தானே உண்ணக் கற்றுக்கொள்கின்றது.

—பகற்பொழுதில் நீர், மலம் கழிக்கும் பயிற்சி ஏற்படுகின்றது—இது பண்பாட்டுப் பழக்கங்களைப் பொறுத்தது, வயது வேறுபடலாம்.

—வயதுவந்தோரின் செயல்களைக் கவனித்து அவர்களைப்போல் செய்ய முயல்கிறது.



# பேர் சொல்ல ஒரு பிள்ளை!

பிறந்தவுடன் குழந்தையை சீராகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். பிறந்தநாள் முதலிலிருந்தே தாய் தன் பாலைக் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். எப்பொழுது குழந்தை அழுகின்றதோ, அப்பொழுதெல்லாம் தாய்ப்பால் கொடுப்பது அவசியம்.

பிறந்த இரண்டு மணிக்குள் தாய்ப்பால் கொடுப்பது. தாய்க்கும் குழந்தைக்கும் நல்லது. இவ்வாறு செய்தால் தாய்ப்பால் அதிக அளவில் சுரக்கும். முதல் சில நாட்களில் சுரக்கும் தாய்ப்பாலில் முக்கியத் தடுப்புச் சக்திகள் உள்ளன. தாய்க்கு வந்த சில நோய்கள் குழந்தைக்கு வராமல் தடுக்கலாம்.

பிரசவமான தாய் நல்லஉணவு உட்கொண்டால் குழந்தைக்குத் தேவையான பால் கிடைக்கும். தினந்தோறும் பச்சைக் கீரை சார்ந்த உணவு வகைகள் சாப்பிடுவது மிகவும் அவசியம்.

குழந்தை பிறந்தவுடன் குளிப்பாட்டுதல் கூடாது. குழந்தையின் மேல் வெண்மையான மாவுபோல் இருக்கும். இதை எடுத்து விட்டால் குழந்தைக்குப் பாதுகாப்பு மிகவும் குறைந்து போகும். குழந்தையை நன்றாகப்போர்த்து வைக்கவேண்டும். ஆரோக்கிய

**2 முதல் 3 வயது வரை**

—குதிக்கவும், ஏறவும், ஒற்றைக் காலில் குதிக்கவும் கற்றுக் கொள்கிறது.

—பேச்சுத் திறன் வளர்கின்றது; 'நான்' 'எனது' எனும் சொற்களைப் பயன்படுத்துகிறது—கேள்வி கேட்கிறது.

—தாளில் அல்லது மணலில் வட்டம் வரைகின்றது.

—பிற சிறுவருடன் விளையாடத் தொடங்குகிறது—2 வயதில்தான் பிறருடன் பழகும் பருவம் தொடங்குகிறது.

**3 முதல் 4 வயது வரை**

—தானே சுற்றுப்புறங்களுக்குச் செல்கிறது—அண்டை வீடுகளுக்குச் செல்லுகிறது.

—தானே உடை அணியவும் களையவும் தெரிகின்றது.

—2 அல்லது 3 நிறங்களை அறிந்து கொள்கிறது.

—தெளிவாகப் பேசுகிறது. தனது பெயர் பாலினம், வயதைக் கூறுகின்றது.

—பல கேள்விகளைக் கேட்கின்றது.

—தம்பி, தங்கையிடம் அன்பு காட்டுகிறது.

**4 முதல் 5 வயது வரை**

—குதிக்கிறது, ஆடுகிறது.

—தலையும் முக்கிய உறுப்புகளுமுள்ள உருவத்தை வரைகின்றது.

—சதுரத்தையும் முக்கோணத்தையும் பார்த்து வரைகின்றது.

—விரல்களை எண்ணக் கற்றுக் கொள்கிறது.

—தான் விரும்புவதைச் செய்யாமல் தடுத்தால், அதைக் கடுமையாக எதிர்க்கிறது.

—வயது வந்தோரின் செயல்களில் அக்கறை காட்டுகின்றது.



மான குழந்தை மூன்று கிலோ எடையுள்ளதாக இருக்கும். நன்றாகக் கையையும், காலையும் உதைத்துக் கொண்டு அழும். ரோஜாப்பூ நிறத்தில் இருக்கும்.

ஐந்து அல்லது ஆறுநாட்கள் ஆனவுடன், குழந்தைக்கு லேசான மஞ்சள் காமாலை போன்ற கோளாறு வரக்கூடும். இது தானாகவே மறைந்துவிடும். இப்படியிருந்தாலும், தாய்ப் பாலையே கொடுக்க வேண்டும். குழந்தையின் உடலில் உள்ள இந்த அணுக்கள் சீக்கிரம் அழியக் கூடியவை. இந்த அணுக்கள் அழிவதாலேயே காமாலை வருகின்றது. வெளிச்சம் பட்டால் இதற்கு மிகவும் நல்லது.

குழந்தை பிறந்தவுடன் எடை எடுப்பது மிகவும் நல்லது. அப்பொழுதுதான் குழந்தையின் வளர்ச்சி சரியாக உள்ளதா இல்லையா என்பது தெரியும். எடை அட்டவணையை உபயோகிப்பது நல்லது. ஒவ்வொரு மாதமும் எடை அதிகமானால், இது அதன் வளர்ச்சியைக் குறிக்கிறது.

தொப்புள்கொடி, 6 அல்லது 7 நாட்களில் விழுந்துவிடும். விழுந்தவுடன் அதன்மேல் எதையும் வைத்துக் கட்டக்கூடாது. சுண்ணாம்பு சாணம் போன்றவற்றை புண்மீது பூசக்கூடாது.

தொப்புள் கொடியில் இருந்து சீழ் வந்தால் உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

குழந்தை விளையாடாமல் இருந்தாலோ, அல்லது கை கால் ஆட்டாமல் இருந்தாலோ பால் குடிக்காமல் இருந்தாலோ, உடனே தேர்ச்சி பெற்ற குழந்தைகள் நல மருத்துவரை அணுக வேண்டும்.

குழந்தையை எடுக்கும் முன் கைகளை நன்றாகக் கழுவவேண்டும். பிற குழந்தைகளுக்கு வேறு நோய்கள் இருந்தால் இந்தக் குழந்தையைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் பொழுது குழந்தைகள் மலம் கழிப்பதில் தொல்லைகள் ஏதும் இருக்காது. அப்படித் தொல்லை இருந்தால் குழந்தைக்குப் பால் போதவில்லை என்று அர்த்தம்.

தாய்ப்பாலைப் போல் குழந்தைக்கு உகந்தது வேறொன்றும் இல்லை.

முதல் இரண்டு மாதங்கள் இவ்வாறு கவனமாகப் பாதுகாத்த பின்னர், குழந்தை நன்றாக நோயின்றி வளரும்.

—டாக்டர் எஸ். ஜெயம்.

**5 முதல் 6 வயது வரை**

—மரம் ஏறவும், இசைக்கேற்ப ஆடவும் தெரியும்.

—சரியாகப் பேசுகின்றது; மழலைப் பேச்சு இப்போது இல்லை.

—தலை, உடல், உறுப்புகள், கைகள் ஆகியவையுள்ள உருவம் வரைகின்றது.

—வல, இடப்புறங்களுக்கும், நேற்று, நாளை ஆகியவற்றிற்கும் வேறுபாடு தெரிகின்றது.

—வீட்டு, சுற்றுப்புற நடவடிக்கைகளில் அக்கறை காட்டுகிறது.

—இளைஞர், முதியோரது வயதில் அக்கறை காட்டுகிறது.

—அதிகாரம் செலுத்தப்படும்போது அதை வெறுக்கிறது. ஆணைகளை மெதுவாக நிறைவேற்றுகிறது.

கூரியர்

நன்றி : 'சர்வோதயம்'



## உங்கள் கவனத்திற்கு...

- அம்மைப்பால் வைத்த இடத்தை உடனே கழுவாதீர்கள். அந்த இடத்தின்மேல் கட்டுப் போடுவதோ, நாமக்கட்டி, ஓடு முதலியவற்றை உறைத்துப் பற்றுப்போடுவதோ போரிக் பவுடர், சாம்பல் முதலியன வைப்பதோ கூடாது.
- அம்மை குத்திய இடத்தில் புண் ஏற்பட்டு அது, தானே ஆறி, தழும்பு ஏற்படுவது தான் உங்கள் குழந்தைக்கு நல்லது.
- முத்தடுப்பு ஊசிபோட்ட அன்று குழந்தைகளுக்கு ஜுரம் வரக்கூடும். இது சாதாரணமாக வரும் ஜுரம் தான். பயப்படத் தேவையில்லை,
- தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து (போலியோ டிராப்ஸ்) ஊற்றுவதற்கு மூன்று மணி நேரம் முன்னும், மருந்து ஊற்றிய மூன்று மணி நேரத்திற்குப் பின்னும் தாய்ப்பால் தருதல் கூடாது. அதற்குப் பதிலாகப் பசும்பாலோ, புட்டிப்பாலோ கொடுக்கலாம்.
- குழந்தைக்குக் காய்ச்சல், பேதி முதலியன இருந்தால் மட்டுமே தடுப்பு ஊசி போடுதலைத் தள்ளிப்போடலாம். வேறு எக்காரணத்திற்காகவும் தடுப்பு ஊசி போடுதலை ஒத்தி வைக்கக் கூடாது. இலேசான சளி, இருமல் இருந்தால்கூட தாராளமாகத் தடுப்பு ஊசிபோடலாம். இதனால் கெடுதல் ஏதுமில்லை.



குழந்தைகள் தினம் ஆண்டுதோறும் நவம்பர் 14-ஆம் தேதி கொண்டாடப் படுகிறது. அடுத்து வரும் குழந்தைகள் தினத்தின் குறிக்கோளாகக் 'குழந்தையின் உரிமைகள்' கடைப்பிடிக்கப்படும். பொதுமக்களிடையே குழந்தைகளின் உரிமைகள் மற்றும் இவை சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி விழிப்பு உணர்வு ஏற்பட முயற்சி எடுக்கப்படும். 1979-ஆம் ஆண்டு சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்படுவதையொட்டி அரசின் தேசிய செயல் திட்டம் முக்கியத்துவம் பெறும்.

உலகக் குழந்தைகள் தினத்தை தற்போது, 125 நாடுகள் கொண்டாடுகின்றன.

குழந்தைகளுக்கான நல்வாழ்வுப் பணிகள் மூலம் இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட மத்திய அரசு பல யோசனைகளை மாநில அரசுகளுக்குக் கூறியுள்ளது. இந்த தினத்தில் இயன்ற அளவு மிக அதிகமான குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுவது இவற்றில் ஒன்று. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணி நிலையங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்குக் கூடுதலாகச் சத்துணவு அளிப்பது மற்றொரு யோசனையாகும்.




வண்ணமயம்
வண்ணமயமான பருத்திப்
பட்டாடைகள் குவிந்துள்ளன
உங்கள் குடும்பத் தேவை
யனைத்திற்கும் கோ-ஆப்டெக்ஸ்
துணிகளையே தேர்ந்தெடுங்கள்.
புடவைகள் ● ஷர்ட்டிங்குகள் ●
வேட்டிகள் ● ரெடிமேடுகள் ●
● லுங்கிகள் ● ஜனதா புடவைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

# குழந்தைகள் கல்வி




—திரு பி. தர்மராஜன், அய்.ஏ.எஸ்.,
இயக்குநர்,
சமூக நலத்துறை.

**''குழந்தைகளின் நலன் நாட்டில் மிக முக்கியமான கவனிக்கப்படவேண்டிய ஒன்று. ஏனெனில் அவர்களிடமிருந்துதான் புதிய இந்தியாவை உருவாக்கக் கூடிய நாளைய குடி மக்கள் உருவாகிறார்கள்.''**

**—ஜவகர்லால் நேரு.**

ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களில் இரண்டரை வயது முதல் அய்ந்து வயது வரையிலான முன்பள்ளிப் பருவம் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், அப்பருவம் தான் அக்குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் அடிகோலும் பருவம். இப்பிரச்சினையில் குழந்தைகள் நலத்தில் அக்கறைகொண்ட வல்லுநர்களுக்கோ மனஇயல் நிபுணர்களுக்கோ மாற்றுக் கருத்து ஏதும் இருக்க முடியாது. ஆனால் எல்லோருக்கும் ஆதாரக் கல்வி வசதி அளிக்கப்படவேண்டுமென்றகொள்கையுடைய நமது நாட்டில், ஆதாரக் கல்விக்கு ஓர் இணைப்புப் பாலமாகவும் அடித்தளமாகவும் விளங்கும் குழந்தைகள் கல்வியில் சரிவரக் கவனம் செலுத்தப்படாமல் உள்ளது வருந்துதற்குரிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை முன்னாதாரக் கல்வி அரசின் திட்டங்களில் ஒன்றாகவும் சமூக நலத் துறையின் முக்கிய திட்டமாகவும் திகழ்கிறது. ஆதாரக் கல்விக்கு அடிப்படையான மனோ நிலையையும் நல்ல பழக்க வழக்கங்களையும், உருவாக்கித் தரும் முன்னாதாரப் பள்ளியினை அமைப்பது, ஆதாரப் பள்ளிகளை அமைப்பதற்கு ஈடான செயலாகும் என்பதை அரசு உணர்ந்துள்ளது.

இரண்டரை வயது முதல் அய்ந்து வயது வரையுள்ள முன்பள்ளிப் பருவம்தான் குழந்தைகளிடையே நல்ல பழக்க வழக்ககங்கள், குண நலன்கள், அறிவு வளர்ச்சி முதலியன உருவாக்கத் தகுதியான பருவமாகும். இப்பருவத்தில் அதைச் செய்யத் தவறினால் அக்குழந்தை தகுந்த முறையில் வளர நாம் ஆற்ற வேண்டிய பணியை ஆற்றாமல் விட்டுவிட்டவர்களாவோம். இவ்வாறு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய அடுத்தடுத்த பருவங்களில்எவ்வளவு முயன்றாலும் முடிவதில்லை. அதனால்தான் 'விளையும் பயிர் முளையிலே' என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே, முன்னாதாரக் கல்வி, பள்ளிமூலம் குழந்தைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதலை, நாட்டின் நீண்ட கால வளர்ச்சிக்கான ஆக்கப்டணிகளில் ஒன்றாகவே கொள்ளலாம். மற்ற தொழில் வளர்ச்சித் திட்டங்கள் போல் நாடு முழுவதற்குமான ஒரு பொருளாதாரத் திட்டம் என்றே இதனைக் கூறினாலும் மிகையாகாது.

முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் சுற்றுப்புற சூழ்நிலை மன வளர்ச்சிக்கும் நல்ல



பழக்க வழக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு குழந்தைகள் வளரும் சாதகமான சூழ்நிலைக்கும், ஒரு மனிதனின் சிறந்த எதிர்காலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இச் சாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவுவார்கள். பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கு இதுபோன்றே முன்னாதாரப் பள்ளிகள் அமைத்துக் கொடுப்பது. அவர்களுக்கு தங்கள் குழந்தைகளைப் பற்றிய கவலையை நீக்கி நிம்மதியைத் தருவதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவுகிறது.



முன்னாதாரக் கல்வியின் பயனைப் பெற்ற குழந்தைகளுக்கு, பள்ளிப் படிப்பில் ஆர்வமும், அக்கறையும் ஏற்படுகின்றன. அதன் மூலம் கல்வியில் சிறந்து விளங்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் பாகுபாடற்ற சமத்துவ நிலையும், நல்ல சூழ்நிலையும் பள்ளிகளில் ஒழுக்கமிக்க மாணவ மணிகளை உருவாக்கவும், தற்போது பள்ளி மாணவ மாணவியரிடையே காணப்படும் குறைபாடுகள் நீங்கவும் வழி வகுக்கும். பள்ளிக் குழந்தைகள் அரைகுறைப் படிப்புடன் நின்று விடும் வழக்கத்தை இது வெகுவாகக் குறைக்கிறது.

இம் முன்னாதாரப் பள்ளிகள் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இலவசக் கல்வித் திட்டம் வெற்றி பெற உதவுகிறது என்பது வெள்ளிடை மலை. ஆனால் இதே முன்னாதாரக் கல்விதான் பெண்கள் கல்விக்கும் ஊக்கமளிக்கிறது என்பதையும் மறுக்க முடியாது. ஏனெனில் தம்பி, தங்கைகளை நாள் முழுதும் வீட்டில் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மிக்க பெண் குழந்தைக்கு அத் தம்பி தங்கைகள் கல்விக்கூடம் சென்றால் தன் கல்வியையும் கவனிக்க அவகாசம் கிடைக்கிறதல்லவா!

முன்னாதாரப் பள்ளிகளைப் பெருமளவில் நடத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மாநிலத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏறத்தாழ 4,100 முன்னாதாரப் பள்ளிகள் அரசால் நேரடியாக நடத்தப்பட்டு வருவதிலிருந்து முன்னாதாரப் பள்ளிக்கல்வித் திட்டத்திற்கு அரசு அளித்து வரும் முக்கியத்துவம் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. சிறு கிராமங்கள், மலைப் பகுதிகள் என தமிழ் நாட்டிலுள்ள மூலை முடுக்கெங்கும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் புறங்களிலுள்ள எல்லாக் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின் பலன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் பெருமளவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதன் நோக்கமாகும்.

இம்முன்னாதாரப் பள்ளிகள், பால்வாடி, குழந்தைகள் காப்பகம் என்ற பெயர்களில் மக்களுக்கு அறிமுகமாகியுள்ளன.

குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகள் விளையாடுவதற்காக விளையாட்டுக் கருவிகள் உள்ளன. அது மட்டுமின்றி பற்பல விளையாட்டுகள், ஆடல் பாடல், சுத்தம், சுகாதாரம் பற்றிய பாடல்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவை குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கின்றன. இக் குழந்தைகள் காப்பகங்களிலுள்ள விளையாட்டுக் கருவிகள், மற்றும் கற்றுத் தரப்படும் விளையாட்டுக்கள் மூலம் குழந்தைகளிடம் இயற்கையாகவே காணப்படும் சக்தியும் ஆற்றலும், திறமையும் வளர்ச்சியடைகின்றன. கூடி வாழ்தல், பகிர்ந்துண்ணுதல், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல், ஒன்றுபட்டு உழைத்தல் போன்ற சமுதாய வளர்ச்சிக்கு வழி வகுக்கும் நற்குணங்கள் குழந்தைகளிடையே உருவாகவும் வாய்ப்பளிக்கின்றன. உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் சத்துணவுத் திட்டம் போன்றவற்றின்மூலம் குழந்தைகளின் உடல் வளர்ச்சி கவனிக்கப்படுகிறது.

குழந்தைகள் காப்பகங்களின் மூலம் முன்னாதாரக் கல்வியளிப்பது மட்டுமின்றி சத்துணவு அளிக்கவும், உடல் நலம் பேணவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் பல்வேறு தேவைகள் ஒருங்கிணைந்து கவனிக்கப்படுகின்றன. குழந்தைகளின் தேவைகளில் இன்ன தேவைதான் மிகவும் முக்கியமானது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. எல்லாத் தேவைகளையும் ஒருங்கிணைந்த வகையில் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, குழந்தைகள் நலத் திட்டங்களைத் தனித் தனியாக செயல்படுத்தாமல் ஒருங்கிணைத்து, கட்டுக்கோப்புடன் கூடிய திட்டமாக செயலாற்ற வேண்டுமென்பதுதான் தற்போதைய அணுகுமுறை.

கிராமப்புறங்களில் நடை பெறும் குழந்தைகள் காப்பகங்களை குழந்தைகளுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து தரும் ஒரு மையமாகத் திகழச் செய்ய வேண்டும். அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டுகள் தொடங்கி ஐந்து ஆண்டுக் காலத்தில் 9,000 குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதும், கிராமத்திற்கு ஒரு குழந்தைகள் காப்பகம் அமைய வேண்டும் என்பதும் நமது இலட்சியங்களாகும்!



# சென்னை குழந்தைகள் மருத்துவமனை

**1979—**ஆம் ஆண்டு—

அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப் படுகிறது.

'நலமான குழந்தையே நாட்டின் சொத்து' என்பதை உலகம் முழுவதும் உணரத் தக்க வகையில் இவ்வாண்டு கொண்டாடப் படுகிறது.

''குழந்தைகள் — பசித்திருந்தால் உணவளிக்க வேண்டும். நோயுற்றிருந்தால் பேண வேண்டும். மனவளர்ச்சி குன்றியிருந்தால் செம்மை படுத்திட வேண்டும். அனாதையாகவோ ஆதரவின்றியோ இருந்தால் பாதுகாப்பும் பராமரிப்பும் தந்திட வேண்டும்'—என்று ஜெனிவா சாசனம் என அழைக்கப்படும். குழந்தைகளின் உரிமைப் பட்டயம், மனித சமுதாயம் குழந்தைகளுக்கு ஆற்ற வேண்டிய தொண்டினையும் அளித்திட வேண்டிய பாதுகாப்பினையும் எடுத்துரைக்கிறது.

இன்றைய குழந்தைகள் தாம் நாட்டின் எதிர்காலச் செல்வங்கள். அந்தச் செல்வங்கள் செழிப்புடன் வளர, நலமுடன் திகழ மருத்துவ உதவிகளை அளித்திடும் மாபெரும் மருத்துவ மனையாகத் திகழ்கிறது. சென்னை எழும்பூரில் அமைந்துள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவ மனை.

இந்தியாவிலே உள்ள மிகப் பெரிய குழந்தைகள் மருத்துவ மனையாகும் சென்னை குழந்தைகள் மருத்துவமனை. பிறந்த குழந்தையிலிருந்து பன்னிரெண்டு வயதுவரையிலுள்ள சிறார்கள் முடிய இங்கு சிகிச்சை அளிக்கப் படுகிறது.

**இந்தியாவிலே உள்ள குழந்தைகள் மருத்துவ மனைகளில் மிகப் பெரிய மருத்துவமனை, சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சிநிலைய மருத்துவமனை ஆகும். ஆண்டுதோறும் குழந்தைகள் மருத்துவத்தில் பட்டமேற்படிப்பில் பட்டம் பெறுவோர் எண்ணிக்கையும் நம் நாட்டிலேயே இங்குதான் மிகஅதிகம். இப்படி பல்வேறு சிறப்புகளுக்கு உரியதாக விளங்கும் சென்னை குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவ மனையைப் பற்றிய விவரங்களை விளக்குகிறது இக்கட்டுரை**

1948ஆம் ஆண்டுக்கு முன்னர் சென்னையில் குழந்தைகள் மருத்துவத்திற்காக தனியான மருத்துவப் பிரிவு கிடையாது. சென்னை மருத்துக் கல்லூரியின் மருத்துவ மனையிலேயே பல் வேறு பிரிவுகளிலும் 28 படுக்கைகள் குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டு இருந்தன. புற நோயாளிகளாக நாள்தோறும் 40 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இப்பொழுது எழும்பூரிலுள்ள மகப்பேறு மருத்துவ மனை முன்பு பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை என்று அழைக்கப்பட்டது. இங்கு குழந்தைகளுக்காக 28 படுக்கைகள் கொண்ட வார்டு அமைக்கப்பட்டுள்ளது.

1949ல் தான் குழந்தைகள் மருத்துவத்தில் மேற்பட்டப் படிப்புப் பெற்றிட சில மருத்துவர்கள் இங்கு சேர்க்கப்பட்டனர்.

1953ல் உலக நல்வாழ்வு நிருவனம் ( WHO ) எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக குழந்தைகள் மருத்துவத்தில் செவிலியருக்கு பயிற்சி அளிக்க யுனிசெஃப், உலக நல்வாழ்வு நிறுவனம், அப்போதைய சென்னை அரசு ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் உருவாக்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கு 48 படுக்கைகள் கொண்ட பெரிய வார்டு சென்னை பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்டது. தொற்று நோய்களுக்காக 12 படுக்கைகள் கொண்ட பிரிவு அமைக்கப்பட்டது.

பின்னர் 1957லும், 1961லும் குழந்தைகள் மருத்துவத்தில் மேற்பட்டப் படிப்பு தொடங்கப் பட்டன.



Prof. K. A. கிருஷ்ணமூர்த்தி,
இயக்குநர் — கண்காணிப்பாளர்





சென்னையில் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம் மருத்துவமனை 15-11-1968 முதல் சென்னை எழும்பூர் ஹால்ஸ் சாலையில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில் செயல்படத் தொடங்கியது.

இந்த மருத்துவமனை 250 படுக்கைகள் கொண்டதாகும். இத்துடன் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில், பேறு காலத்துக்கு முன்னே பிறந்த குழந்தைகள் பாதுகாப்புக்காக 28 படுக்கைகள் கொண்ட தொகுதியும் குழந்தைகள் மருத்துவமனையோடு இணைந்துள்ளது.

குறுகிய காலத்திலே வளர்ந்துள்ள இம்மருத்துவ மனை இன்று **தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவிலேயே மிகப் பெரிய குழந்தைகள் மருத்துவ மனையாக விளங்குகிறது.**

**வாரம் முழுவதும் வேலை நாட்கள்**

குழந்தைகள் மருத்துவ மனைக்கு வாரம் முழுவதும் — ஏழு நாட்களும் புறநோயாளிகளுக்காக காலை 7 மணி முதல் இரவு ஏழு மணி வரை செயல்படுகிறது.

நாள்தோறும் சிகிச்சைக்காக இங்கு 2,500 குழந்தைகள் வருகின்றனர். புறநோயாளிகள் பிரிவில் 30 டாக்டர்கள் பணியாற்றுகின்றனர்.

அவசரச் சிகிச்சைப் பிரிவு எந்நேரமும் செயல்படுகிறது. 1,500 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடப்படுகிறது. போலியோ சொட்டு மருந்தும் கொடுக்கப்படுகிறது. இப்படிக் குழந்தைகளுக்கான பல்வேறு அடிப்படையான மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

தந்தையருடன் வரும் குழந்தைகள் அன்னையருடன் வரும்



குழ்ந்தைகள் என்று இரு பிரிவுகளும் தனித் தனியாக மருத்துவம் பெற வசதி உள்ளது.

**தொற்றுநோய்த் தடுப்பு:**

தொற்று நோய்த்தடுப்புக்கான பிரிவில் தொண்டை அடைப்





பான், கக்குவான், வில்வாத ஜன்னி, இளம் பிள்ளை வாதம், அம்மை நோய் முதலியவைகளுக்குத் தனியான வார்டு உள்ளது.

குழந்தைகள் பிறக்கும் பொழுது முறைப்படி மருத்துவம் செய்யாமல்—குறிப்பாக தொப்புள் கொடியைத் துப்புரவு இல்லாத கத்தியைக் கொண்டு நறுக்குவதால் பெரும் கொடுமைக்கு சின்னஞ்சிறு குழந்தைகள் ஆளாகின்றன. அவைகள் வாத நோய்க்கு ஆளாகின்றன. அவைகளுக்கு உரிய சிகிச்சை இங்கு அளிக்கப்பட்டு காப்பாற்றப்படுகின்றன.

**குழந்தைகளுக்கு இரத்தம்:**

பேறு காலத்துக்கு முன்னதாக பிறந்திடும் குழந்தைகள் அல்லது எடை குறைவான குழந்தைகள் வளர்ச்சிக்காக மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

பிறக்கும் பொழுதே மஞ்சள் காமாலை நோயுடன் சில குழந்தைகள் பிறந்து விடுகின்றன. பிறந்தவுடன் அந்தக் குழந்தைகளுக்கு ரத்தத்தை எடுத்துவிட்டு புதிய இரத்தத்தை செலுத்துகிறார்கள்.

விளக்கின் ஒளி வீச்சு மூலம் இங்குக் குழந்தைகளில் உடலில் வெப்பம் ஏற்பட ஆவனச் செய்கிறார்கள். பிறக்கும்போதே தாயை இழந்துவிட்ட குழந்தைகளுக்கு பாலூட்டிப் பேணிப் பாதுகாக்கும் பணியும் இங்குக் கவனிக்கப்படுகிறது.

பிறப்பிலேயே சில குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளுக்கு பிறந்தவுடனே அறுவைசிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது.

இது குழந்தைகளுக்கு மலம் கழிக்க ஆசனவாய் கூட இல்லாமல் இருப்பதுண்டு. இந்தக் குழந்தைகளுக்கு உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு உணவு குழாயிலும் அடைப்பு இருப்பதுண்டு. பிறக்கும் குழந்தைகளுக்கு 'இரணியா' நோயும் இருப்பது உண்டு. உதட்டில் வெடிப்பு, கைவிரல்கள், கால் விரல்கள் ஒட்டிப்பிறக்கும் குழந்தைகளும உண்டு. அவைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது.

பிறந்தவுடனேயே ஆபரேஷன் செய்ய வேண்டிய குழந்தைகள் தனியான வார்டில் வைக்கப்பட்டுள்ளன. நாம் சுவாசிக்கும்











காற்று அந்தக் குழந்தைகள் மீது படாமலிருக்கும் அளவுக்கு பாது காப்புடனேயே அங்கு செல்ல முடியும்.

தண்டுவடத்தில் குறைபாடு களுடன் பிறக்கும் குழந்தை களுக்கும் அறுவை சிகிச்சை செய்கிறார்களா? இந்த வார்டை சுற்றிப் பார்க்கும் பொழுது குழந்தைகளுக்கு இவ்வளவு நோயா என்று எண்ணத் தோன்று கிறது!

**எடைக் குறைவான குழந்தைகள்**

இந்த மருத்துவமனையில் மிக முக்கியமான பகுதியாக அமைந் துள்ளது எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில், சுற்றண்டப் பில் அமைந்துள்ள-எடைக்குறை வாக உள்ள குழந்தைகளைப் பேணும் பகுதியாகும். 'Premature Unit' என்று வழங்கப்படும் பகுதி யில் 28 படுக்கைகள் உள்ளன.

சாதாரணமாகப் பிறக்கும் குழந்தைகள் 3 கிலோ எடையா வது இருக்க வேண்டும். ஆனால், சில தாய்மார்கள் அடிக்கடி குழந் தைகளைப் பெற்றெடுப்பதால், முதல் குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடைவெளி அதி கம் இல்லாமலிருப்பதாலும் சத் துணவு குறைவினாலும் ஒரே பேற்றில் இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறப்பதாலும் பிறக் கும் குழந்தைகள் எடைக்குறை வாக உள்ளன.

எடைக் குறைவாக உள்ள குழந்தைகளை தனியான வார் டில் அதிக அளவு வெப்ப காற்று டன் கூடிய இடத்தில் வைத்திருக் கிறார்கள். 'ஸ்டட்டர்' வசதி நிறைந்த இந்த வார்டில் நுழைய செவிலியர்களும் மருத்து வர்களும்கூட புதிய காலணிகள், உடல் முழுவதையும் மூடும் அங் கிகள் ஆகியவை அணிந்து செல் கின்றனர்.

இங்கு குழந்தைகளுக்கு உரிய எடை ஏற்படுவதற்கான மருத்து வப் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன. குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்ட அக்குழந்தைகளின் தாயார்கள் வந்தால் தனியான தொரு இடத்தில் அமர்த்தப் படுகிறார்கள். அவர்கள் உடல் முழுவதையும் மருத்துவமனையில் தரப்படும் அங்கியால் மறைத்துக் கொண்ட பிறகு தாய்ப்பாலூட்ட அனுமதிக்கப்படுகிறார்கள். பின் னர் குழந்தைகளை தனியான வார்டில் உள்ள படுக்கைக்கு எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். உள்ளே உள்ள குழந்தைகளை தாயார்கள் கண்ணாடி ஜன்னல் வழியாகத்தான் பார்க்க வேண் டும்.

இங்கு பாதுகாக்கப்படும், பேணிக் காக்கப்படும் குழந்தை கள் 15 நாட்களில் உரிய எடை யை அடைந்து விடுகின்றன. குறைந்த அளவு 800 கிராம் எடையுள்ள குழந்தைகள் கூட இங்கு பாதுகாப்புடன் வளர்க்கப் படுகின்றன.

**குழந்தைகள் வளர்ச்சிக் கலை விளக்க நிலையம்:**

காலையில் 10 மணி முதல் 12 மணி வரை தாய்மார்களுக்கு இங்குள்ள குழந்தைகள் வளர்ச்சி கலை விளக்க நிலையத்தில் சத் துணவு கல்வி கற்பிக்கப்படுகின் றது. நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் இங்கு கற்பிக்கப் படுகிறது.

குழந்தைகள் வளர்ச்சிக் கலை விளக்க நிலையத்தின் பணிகளால் சாதாரண ஏழை எளிய மக்கள் பெருமளவில்பயனடைகின்றனர்.

வைட்டமின் சத்துக்களின் குறைவால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை இங்கு எடுத் துரைப்பதை உணர்ந்து பலதாய் மார்கள் தங்கள் குழந்தைகளை பேணி வளர்க்கத் தொடங்கி உள்ளனர். இங்குள்ள மருத்து வர்களிடம் தங்கள் குழந்தை களைக் காட்டி உடல்நோயை யுணர்ந்து கொள்கின்றனர்.

**சுற்று வட்டாரங்களிலும்...**

சென்னையிலுள்ள குழந்தை கள் மருத்துவமனை, மட்டுமல் லாது மாநகராட்சி மருத்துவ மனையினைச் சேர்ந்த நான்கு இடங்களில் புதுப்பேட்டை, சூளை, சைதாப்பேட்டை, ஷெ னாய்நகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மகப்பேறு மருத் துவ மனையின் ஒரு பகுதியில் குழந்தைகள் மருத்துவப் பணி கள் நடைபெறுகின்றன.

அந்தந்த வட்டாரத்திலுள்ள குழந்தைகளின் நன்மைக்காக வும், அந்தந்த மருத்துவ மனை யில் பிறக்கும் குழந்தைகளின்

வசதிக்காகவும் இந்த மருத்துவ மனைகள் இயங்குகின்றன.

இங்கே, முத்தடுப்பு ஊசிகள் போடுவதுடன் குழந்தைகள் வளர்ப்பைப் பற்றியும் சத்துணவைப் பற்றியும் பெற்றோர்களுக்கு கற்பிக்கப்படுகிறது.

குழந்தைகள்' மருத்துவமனையிலிருந்து குறிப்பிட்ட மூன்று நாட்களில் இங்கு டாக்டர்கள் வந்து குழந்தைகளை சோதனை செய்கின்றனர். ஏனைய நாட்களில் செவிலியர்களும், உதவியாளர்களும் இங்கு செயல்படுகின்றனர்.

மாநகராட்சி தொடக்கப்பள்ளிகளிலும் குழந்தைகள் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர்கள் சென்று குழந்தைகளை பரிசோதனை செய்கின்றனர்.

மேற்சொன்ன நான்கு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுப்புற மருத்துவ மனைகளில் 'குடும்ப கார்டுகள்' என்ற முறையில் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள குழந்தைகள் பற்றி விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அதனால் இங்கு சிகிச்சை பெறும் குழந்தைகள் பற்றி முழு விவரங்களையும் இந்த 'Family Cards'









மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்:**

மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசின் சமூகநலத்துறை செயல்படுத்தி வரும் திட்டம் ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் குழந்தைகள் நல மருத்துவமனையின் உதவியுடன் சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது.

சென்னை நகரில் 100 இடங்களில் 'அங்கான்வாடிகள்' எனப்படும் குழந்தைகள் காப்பகங்கள், குடிசைமாற்றுவாரிய கட்டடப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன அந்தப் பகுதி மக்களுக்கு இவை பெருமளவில் பயன்படுகின்றன.

இப்படியாக சென்னை குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம் பணிகளைப் பற்றி விவரித்துக் கொண்டே போகலாம்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தக் குழைந்தைகள் மருத்துவ மனையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் தணிக்கைக்குழுக் கூட்டமாகும். மருத்துவமனை மேற்பார்வையாளரின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், நோய் வாய்ப்பட்ட குழந்தைகள் மீது மேற்கொண்ட மருத்துவப் பணிகளைப் பற்றி ஆராய்வதாகும். இதனால் அங்கு வரும் மருத்துவர்கள் அனைவரும் குழுவாக குழந்தைகள் மருத்துவப் பணியைப் பற்றி நன்கு தெரிந்து கொள்கின்றனர்.

இதுபோன்ற பணியை எல்லா மருத்துவமனைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவ அறிஞர்கள் விரும்பியுள்ளனர்.

இத்தகைய சிறப்புமிக்கப் பணிகளைச் செய்துவரும் குழந்தைகள் மருத்துவமனையின் அரிய சாதனைகளால்--



நாளைய தலைமுறை
நலமுடன் வளர்கிறது !
வருங்கால வாழ்வு
வளத்துடன் உருவாகிறது !
எனவே

நன்றியுடன் குழந்தைகள் மருத்துவமனையின் அரும் பணிகளைப் பாராட்டுவோம்! போற்றுவோம்.

—மாமூலன்

இந்த இதழில் வெளியாகியுள்ள குழந்தைகள் நலம்—மருத்துவக் கட்டுரைகள் அனைத்தும் குழந்தைகள் நாள் விழாவான 14-11-78 அன்று குழந்தைகள் மருத்துவ மனையினரால் வெளியிடப்பட்டுள்ள மலரிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

# பசுமலை பாரதியார்

— மு. சோமசுந்தர பாரதி



[தமிழையும் தமிழ் உணர்வையும் வளர்த்த பெரியோர்களுள் பசுமலை நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைசிறந்தவராவார். அன்னாரின் நினைவுநாள் டிசம்பர் 14.]

**1959-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ந் தேதி!**

தமிழர் உள்ளத்தில் வேதனை நிரம்பி வழிந்த நாள். தமிழ் மண்ணுக்காக வாழ்ந்த ஒரு கிழச்சிங்கத்தின் கர்ஜனை ஓய்ந்த நாள். முதுமையிலும் இளமையுடன், திகழ்ந்து தமிழ் வாழ, தமிழ் மண் சிறப்புற தன்னையே அர்ப்பணித்த நாவலர் பாரதியார் தமிழ்மேல் சாய்ந்த நாள்!

வடலூரார் என்றால் அருட்பெருஞ் ஜோதி இராமலிங்க சுவாமியையும், ஈரோட்டார் என்றால் தந்தை பெரியாரையும், சேலத்துச் செல்வர் என்றால் மூதறிஞர் ராஜாஜியையும், காஞ்சியார் என்றால் பேரறிஞர் அண்ணாவையும், விருதுநகரார் என்றால் பெருந்தலைவர் காமராஜையும், பசும்பொன்னார் என்றால் முத்துராமலிங்கத் தேவரையும் நினைப்பது போல், பசுமலையார் என்றால் நாவலர் ச. சோமசுந்தரபாரதியாரை நினைவுறுகிறோம்.

**பாரதியார் இருவர்!**

'பாரதியார்'-இச்சொல் கேட்டவுடன் தமிழ்த் தாணியார் கண்முன் தோற்றமளிப்பவர்கள் இருவர். ஒருவர் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டு ''ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டதாய்'' நாம் சுதந்திரம் வாங்குவதற்கு முன்பே தீர்க்கத் தரிசனப் பள்ளுப்பாடிய கவியரசர் சுப்பிரமணிய பாரதியார். அடுத்தவர் தமிழ்நாட்டு விடுதலைக்குத் தன்னையேஈடு படுத்திக் கொண்ட, பேச்சால், எழுத்தால், பிறர்க்கும் உரைக்கும் நன்மறுப்பால் மூச்சாய் தமிழ் உணர்ச்சியூட்டிய மூதறிஞர்; ''வீரத் தமிழினத்தின் மேன்மைக்கு உழைத்த தமிழ்ச் சூரப்புலி'' என பாவேந்தர் பாரதிதாசனால் பாராட்டப்பட்டவர்: ''மாத மும்மாரி இம் மண்ணிடைப் பொய்ப்பினும் நாத மும்மாரி நடாத்துவான் பாரதி'' என அரசவைக் கவிஞர் கண்ணதாசனால் போற்றப்பட்டவர்: நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.

பாரதியார் இருவரிடையே சில ஒற்றுமைகளைக் காண்கிறோம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'இரட்டைப் புலவர்கள்' என இருவர் சிறப்பித்துச் சொல்லப்படுவது போன்று 19-ஆம் நூற்றாண்டின் இரட்டையர்கள் இவர்களென்றால் மிகையில்லையே!.

1882-ஆம் ஆண்டு பிறந்த சுப்பிரமணிய பாரதியும், 1879-ஆம் ஆண்டு பிறந்த சோமசுந்தர பாரதியும் ஏறத்தாழ சம வயதுடையவர்களே. தமிழன்னையின் அன்புப் புதல்வர்களான இருவரும் பிறந்தது எட்டயபுரத்தில் தான். சுப்பிரமணிய பாரதியின் தந்தை சின்னச்சாமி அய்யரும், சோமசுந்தர பாரதியின் தந்தை சுப்பிரமணிய நாயகர் என்ற எட்டப்ப பிள்ளையும் வேலை பார்த்த இடம் எட்டயாபுர அரண்மனைதான்.

சுப்பிரமணிய பாரதி வளர்ந்து வந்த அவரின் பாட்டி வீடு சோமசுந்தர பாரதி வீட்டின் பின்புறம் இருந்தமையால் இருவரும் ஒன்றாய் சிறுவயது முதற்கொண்டு நண்பர்களாய்ப் பழக முடிந்தது ஒன்றாகவேப் படிப்பது, ஒன்றாகவே விளையாடுவது, அரண்மனைக்குப் போவது, பிற புலவர்களிடம் அளவளாவுவது இப்படியே இணை பிரியாமல் இருந்து வந்தவர்கள். 'டே சோமு,' 'டே சுப்பு' என்று செல்லமாய் அழைத்துக் கொண்டவர்கள்.

தமிழைப் படிப்பதும், பேசுவதும் கேவலம் எனக் கருதிய காலத்தில் இயல்பாகவே தமிழ்மேல் காதல்கொண்டு தணியா விருப்புடன் பெற்றோரும், மற்றோரும் அறியாவண்ணம் பக்கத்திலிருந்த பெருமாள் கோயில் வாகனங்களிடையே மறைந்து கொண்டு தமிழ் படித்தவர்கள்.

பெற்றோர் இட்ட பெயர் திரிந்து புகழால் மெருகேறிய பெயரையே உடையவர்கள் சுப்பிரமணி பாரதி, சோமசுந்தர பாரதி முறையே பெற்றோர்கள் இட்ட பெயர்- சுப்பையா, சத்தியானந்த சோமசுந்தரன். ஞானம் மிக்கவர் (சரஸ்வதி) என்ற பொருளுடைய 'பாரதி'ப் பட்டத்தை அறிஞர் பெருமக்களால் பெற்றவர்கள். எட்டயாபுரத்தில் உயர்நிலைக் கல்வி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாததால் பாரதி இருவரும் நெல்லை சென்று அங்குத் தங்கிப் படித்தகாலை யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர் ஒருவர் தலைமையில் நடந்த ஈற்றடி வெண்பாப் போட்டியில் கலந்து கொண்டு முதன்மையாய் பாடல் பண்ணிக் கொடுத்தபோதுதான் பாரதிப் பட்டம் அப்புலவரால் அறிஞர் பெருமக்கள் சார்பில் வழங்கப்பட்டது.

இருவருமே இளமையிலேயே மணங் கொண்டவர்கள்; உணர்ச்சி மயமாய்ப் பேசி மற்றவர்களைத் தட்டியெழுப்பும் ஆற்றல் உடையவர்கள்; தீண்டாமை, சாதிப் பேய்களை விரட்டும் உரத்த சிந்தனையாளர்கள்; சீர்திருத்த எண்ணம் கொண்டவர்கள்''போற்றுபவர் போற்றினும் புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றினும்'' சொல்லவந்த கருத்தை ஏற்றத்துடன் சொல்லும் உரனுடையவர்கள்; தமிழ்ப் பிரியர்கள்; தமிழாசிரியர்களாய்இருந்தவர்கள். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றியவர்; நாவலர் சோமசுந்

தரபாரதியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைமைப் பணி புரிந்தவர். மேனோக்கும் எண்ணங்கொண்ட அவர்களுக்கு வானோக்குத் திறங்கொண்ட துடிக்கும் மீசை உதடுமிசை இருந்தது. இரு வருக்கும் சுதந்திரத் தாகம் குறிக்கோளாய் இருந்தது என்பதை முத்துமிடை மணியென சுட்டிக்காட்ட வேண்டும்.

**தமிழ்க் காவலர்**

தற்காலத் தமிழுலகில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி ஏறுபோல் பீடுநடைகொண்டு ஏற்றம் பெற்று இலங்கிய நாவலர், கணக்காயர், டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர்; உயர்ந்த உரையாசிரியர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து தமிழுக்குப் பல தொண்டுகள் புரிந்தவர்.

சட்டப்படிப்பு படித்தவர்; சட்டக் கலை வரம்பு கண்டவர்; மதுரையில் தலை சிறந்த வழக்கறிஞராய்த் திகழ்ந்தவர்; கிழப் பருவத்திலும் இள ஏறுபோல் இருந்து தமிழ் மொழி, அம்மொழியார், அந்நாட்டின் நலன் என உழைத்த பாவலர்; நற்றமிழ்க் காவலர்; அவர் நூற்றாண்டு விழாக்காணும் இத்தருணத்தில் அவரை நினைவுகூருதல் பொருத்த முடைத்தே.

**வாழ்க்கைப் பாதை :**

சுப்பிரமணிய நாயகர் என்ற எட்டப்ப பிள்ளை, முத்தம்மாள் தம்பதியினருக்கு 1879-ஆம் ஆண்டு சூலை 27-ந் தேதி கருவிலேயே திருவொடு பிறந்த மகவுக்குச் சத்தியானந்த சோமசுந்தரன் என்று பெயரிட்டுச் சிறப்புடன் செம்மையாய் வளர்த்தனர். வசதியுள்ள, வறுமைபாரா வேளாளர் குடும்பத்தில் பிறந்த சோமசுந்தரன் தொடக்க நிலைக் கல்வியை எட்டயாபுரத்திலும், உயர்நிலைக் கல்வி பெறும் வாய்ப்பு எட்டயாபுரத்தில் இன்மையால் நெல்லையில் சென்று பயின்றவர். தமது 15-வது வயதிலேயே மதுரையைச் சேர்ந்த மீனாட்சியம்மையை மணந்தார். புராணத்துச் சோமசுந்தரப் பெருமான் மீனாட்சியம்மையை மணந்தது நான்மாடக் கூடலில்தான்! நம் சோமசுந்தரன் மீனாட்சியம்மையை மணந்ததும் அதே கூடலில்தான்! முதல் மகன் ராஜாராம் பாரதி. இரண்டாம் மகன் இலட்சுமிரதன் பாரதி, மகள் இலட்சுமி பாரதி, என மக்களைப் பெற்றனர். மகள் பிறந்த ஆண்டிலே பட்டதாரியாய் இருந்தவர் சட்டந்தேறினார். பின் 1905 முதல் 1920 வரை தூத்துக்குடியில் தனது வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

வழக்கறிஞராய்ப் பணிபுரிந்து கொண்டே எம். ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற்றார். இதற்கிடையில் நாட்டு உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்டதாக அரசினர் அய்யப்பாட்டுப் பட்டியலில் சோமசுந்தரன் பெயர் இருந்தது. சிறிது காலம் தலைமறைவாய் இருந்தார். பிறகு காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரவாதியாகி பசுமலைக்குத் திரும்பினார். மதுரையில் தமிழ் மாநில காங்கிரஸ் மாநாட்டை நடாத்தினார்.

உடல் நலங்குன்றி முதல் மனைவியார் இறந்ததால் திருவெட்டாற்றைச் சேர்ந்த வசுமதி அம்மையாரை மணந்தார். அவர்களுக்கு மீனாட்சி, லலிதா என இரு மக்கள் பிறந்தனர்.

மதுரைத் தமிழ்ச் சங்க செயலராயும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராயும், சென்னையில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவராயும் விளங்கிய பாரதியார் மும்முறை ஈழ நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார். மூன்றாம் முறை ஈழத்திற்கு அந்நாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம் விடுத்த அழைப்பேற்று, அங்கு சென்றபோது அம்மன்றத்தாரால் 'நாவலர்' ஆனார். மதுரைத் திருவள்ளுவர் கழகம், 'கணக்காயர்' பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. 1930-ல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன் விழாவில் 'டாக்டர்' பட்டம் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்.

1959-ஆம் ஆண்டு நவம்பர் 8-ந்தேதி மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டுவிழாவின் போது நாவலர் ஆற்றிய தொடக்க உரைதான் அவருக்கு இறுதிமேடை உரையாயிற்று. மேற்கொண்டு அவரால் பேச முடியவில்லை. நா தளர்ந்தது. உடல் நலங்குன்றி பசுமலைத் தம் இல்லத்திலேயே இருந்து வந்தார். உடல் நிலை மிகவும் மோசமடைந்து டிசம்பர் 2-ந் தேதி இல்லத்தில் மயக்கமுற்று தெளிவடையாமல் மதுரை அரசினர் பெரிய மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். சிகிச்சை பலனளிக்காது, சுயநினைவில்லாமலிருந்தவர் டிசம்பர் 14-ந் தேதி இரவு 8-40-க்குத் தமிழோடு இணைந்தார். அடுத்தநாள் மாலை 6 மணியளவில் பசுமலையில் பாரதியாரின் பூதவுடல் எரியூட்டப்பட்டது.

**படைப்புகள் :**

'நற்றமிழ், 'பழந்தமிழ்நாடு', 'சேரர் தாய்முறை', 'சேரர் பேரூர்', 'மங்கலக்குரிச்சி' 'பொங்கல் நிகழ்ச்சி', 'அகத்திணையியற் புத்துரை,' 'புறத்திணையியற் புத்துரை' 'மெய்யப்பாட்டியற் புத்துரை', 'அழகு', 'தமிழும் தமிழரும், '

முதலிய கட்டுரை நூல்களும் 'மாரிவாயில்' 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்', 'திருவள்ளுவர்' 'Thiruvalluvar' முதலிய ஆராய்ச்சி நூல்களும் 'தொல்காப்பிய பொருளதிகார விளக்கமும்', தமிழ்ப் பெருமக்களுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் வழங்கிய அழியாச் சொத்துக்களாகும்.

**அறப்பணிக்குழு :**

''தமிழ்நாட்டில் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியைக் கற்பவர்க்கும், தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றி ஆய்வு நடத்துபவருக்கும் உதவித் தொகை அளிக்க வேண்டும்'' என்ற நோக்கத்துடன், 'நாவலர் ச. சோம சுந்தரபாரதியார் கல்வி அறப்பணிக்குழு' ஒன்று 1963-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது.

அக்குழுவில் திருமதி வசுமதி பாரதியார், திருமதி லட்சுமி கிருஷ்ணசாமி பாரதியார், திரு சோ. லட்சுமிரதன் பாரதியார் எம்.ஏ. பி.எல்., திருமதி ர. மீனாட்சி அம்மையார், எம். ஏ., திருமதி லலிதா காமேஸ்வரன் எம்.பி.பி.எஸ்., பி.எச்.டி. (லண்டன்), திரு சி. பழனியப்பன், திரு அ. கி. பரந்தாமனார் எம்.ஏ., திரு ச. சாம்பசிவனார் எம்.ஏ., திரு புலவர் கா வெள்ளை வாரணனார் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். தமிழாய்ந்த தமிழ்மக்களின் புகழ் என்றும் நின்று நிலவ இந்த அறப் பணிக்குழு நன்முறையில் இயங்கி வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப் பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!

பதிவு எண். M. 8676

